Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 16 ( 31-12-93 ) வெள்ளிக்கிழமை ஓசை 316

## பிரச்சினை தீர்க்காவிடில் டி. பி. தோற்பது நிச்சயம்!

''இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வுகாணப்படவேண்டும். இல்லையேல் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்க தோல்விஅடைவது உறுதியாகிவிடும். இத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வெற்றியடைவது தவிர்க்கமுடியாமல்போய்விடும்'' இவ்வாறு கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் விசுவா வர்ணபாலா தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு யுத்தம் இன்று நேற்று தொடங்கப் (12ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரியில் கோரச் சம்பவம்

# விமானக் குண்டு வீச்சிற்கு 7 அப்பாவிப் பொதுமக்கள் பலி;

## 50க்கு மேற்பட்டோர் படுகாயம்

(தென்மராட்சி)

**சாவகச்சேரி நவீனசந்தைப் பகுதியில் நேற்றுமாலை சிறிலங்கா விமானப்படையினரின் இரண்டு புக்காரா விமானங்கள் நடாத்திய அகோர றொக்கட் தாக்குதலில் ஏழு பொதுமக்கள் பலியாகினர். 50க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவாலய திறப்புவிழா நடைபெறுவதற்குச் சற்று முன்பாக இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத் தாக்குதலால் பாடசாலை, தேவாலயம் உட்பட பல கட்டடங்கள் என்பன சேதமடைந்துள்ளன.**

நேற்று மாலை 5. 10 மணியளவில் சாவகச்சேரி நகரப் பகுதிக்கு வந்த இரு புக்காரா விமானங்கள் திடீரென15க்கு மேற்பட்ட றொக்கட்டுகளை அப்பகுதி நோக்கிஏவின. இவ் றொக்கட் தாக்குதலால் அப்பகுதியில் நின்ற நான்கு பொதுமக்கள் அந்த இடத்திலேயே பலியாகினர். மூன்று பேர் யாழ்போதனா வைத்தியசாலையில் மரணமாகினர் 50க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலினால் தேவாலயம், பாடசாலைகள் கடைகள் என்பன சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதலின் போது ஸ்தலத்தில்,

இராமலிங்கம் ஆறுமுகம் (வயது 61) சங்கத்தானை.

எஸ். வள்ளி (வயது 50) அல்லாரை.

பொன்னையா பாலகுமார் (வயது 12) கச்சாய் வீதி சாவகச்சேரி.

இராமன் பாலன் (வயது 60) கச்சாய் வீதி சாவகச்சேரி. ஆகியோரும் யாழ் போதனா வைத்தியசாலையில்,

மு. பேரம்பலம் (வயது 40) காரைநகர்.

பெரியதம்பி சின்னத்தம்பி (வயது34) சங்கத்தானை.

இந்திராணி லோறன்ஸ் (வயது 48) ஆகிய மூவரும் மரணமடைந்தனர். (86)

## குண்டுவீச்சில் காயமடைந்த 41 பொதுமக்கள் விபரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் கூடியிருந்தபொதுமக்கள் மீதுநேற்றுமாலை சிறிலங்கா விமானப்படையினரின் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய றொக்கட் தாக்குதலின்போது ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த பொதுமக்களின் விபரம் வருமாறு:

ராஜரட்ணம் சிவப்பிரகாசம் (வயது 32) சாவகச்சேரி வடக்கு, எஸ். குகனேசன் (வயது28) கச்சாய் வீதி சாவகச்சேரி, சபாரட்ணம் நவரட்ணம் (வயது36), கறுப்பையா தங்கராசா (வயது24), கணபதிப்பிள்ளை சுகுமார் (வயது30), பரமசாமிமகேஸ்வரன்(வயது25), சிவசண்முகலிங்கம் மணியம் (வயது52), சுப்பிரமணியம் (வயது42), எஸ் நமசிவாயம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## எங்கும் அழுகுரல் கேட்டன; சடலங்கள் சிதறிக் கிடந்தன

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் புக்காரா விமானங்கள் அகோரத்தாக்குதலை நடத்தி சென்ற சிலவினாடிக்குள் அப்பகுதி எங்கும் அவலக் குரல்கள்கேட்டன. வீதியிலே பலர் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். உடலிலிருந்து இரத்தம் பீறிட சிலர் எழுந்து கட்டடங்களை நாடி ஓடிக் கொண்டிருந்தனர். வீதிகளில் ஆங்காங்கே பலரது உடல்கள் அசைவற்றுக் கிடந்தன.

தென்மராட்சியின் பல பகுதியிலிருந்தும் மக்கள் கூட்டம் சாவகச்சேரி மருத்துவ மனைக்கு விரைந்ததை அவதானிக்க முடிந்தது. குண்டு வீச்சில் காயமடைந்தவர்களை மீட்கும் பணியிலும் மக்களைக் கட்டுப்படுத்தும் பணியிலும் காவல் துறையினர் பொதுமக்களுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்தனர். காயப்பட்டவர்கள் வாகனங்களிலும் மாட்டுவண்டில்களிலும் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். காயமடைந்தவர்களில் தமது உறவினர்கள் யாராவது சிக்கியிருப்பார்களோ என்ற பதைப்பில் மக்கள் மருத்துவ மனைப் பகுதியில் குழுமியிருந்தனர். அப்பகுதியில் இறந்தவர்களின் உறவினர்கள் ஓலம் எழுப்பியவாறு காணப்பட்டனர்.

இவ் விமானங்கள் பரவலாக மேற்கொண்ட றொக்கட் தாக்குதல்களினால் தென்னிந்திய திருச்சபை தேவாலயம் பலத்த சேதமடைந்ததுடன் பாலர் பாடசாலை, றிபேக்கல்லூரி, மகளிர் இல்லம், வர்த்தக நிலையங்கள் என்பன பலத்த சேதமடைந்தன.

திருக்கணித அச்சகம் மீது நடாத்தப்பட்ட றொக்கட் தாக்குதலினால் அது தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. இத்தீயை அணைக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

## புளொட்வேட்பாளர்பட்டியல் தர ராணுவம் வற்புறுத்து

(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதியில் 1994ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் புளொட் தரப்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று இராணுவம் உத்தரவு பிறப்பித்துளளது.

இராணுவம் கட்டாயமாக உத்தரவு பிறப்பிப்பதைத் தாம் விரும்பவில்லை என்று புளொட் கூறியிருப்பதுடன் வேட்பாளர் பட்டியலை இராணுவத்திடம் சமர்ப்பிக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளது. ஆனால் இராணுவத் தரப்பு இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

மேலும் வரும் ஜனவரி5ஆம் திகதிமுதல் ஒருவார காலத்துக்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யலாம் என்று சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

## பெரும் நெருக்கடியில் தென்மாகாண சபை

(கொழும்பு)

தென்மாகாண சபையில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கூச்சலும் குழப்பமும் நிலவியதையடுத்து சபை ஒத்திவைக்கப்பட்டது. இதனையடுத்து வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமையால் இன்று முதல் மாகாண சபைக்கான செலவினங்கள் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இந்நிலையில், மாகாண சபையினைக் கலைத்துவிடுமாறு மாகாண சபையின் எதிர்க்கட்சிகள் ஆளுநரைக் கோரியுள்ளன.

தென்மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் கடத்தப்பட்டதையடுத்து அம்மாகாணசபையின் ஆளும் கட்சி பெரும் நெருக்கடியில் சிக்கியிருப்பது தெரிந்ததே.

## ராணுவம் அனுமதிமறுப்பு; நோயாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவுக்கு அவசர சிகிச்சைக்காகக் கொண்டு செல்லவிருந்த நோயாளி சிறிலங்கா இராணுவத்தினரின் அனுமதி மறுப்பினால் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தண்ணீரூற்றைச் சேர்ந்த நோயாளியே உயிரிழந்தவராவார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கொண்டு சென்ற இந்த நோயாளிக்கு தாண்டிக்குளத்தில் வைத்து இராணுவம் அனுமதி வழங்க மறுத்தமையால், வவுனியாத் தடை முகாமிலேயே உயிரிழந்தார்.

## வெள்ளத்தில் சிக்கியிருந்த மக்கள் புலிகளால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் வெள்ளத்தில் சிக்கியிருந்த சுமார் இருநூறு குடும்பங்களை விடுதலைப் புலிகளின் விசேட மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர்.

மன்னார் பள்ளமடுப் பகுதியில் உள்ள வலப்பாடு, தவசிக்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்களையே படகுகள்மூலம் மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர்.

தொடர்ந்தும் பெய்துவரும் கடும் மழை காரணமாக இக் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியதில் ஐம்பதுக்கும் அதிகமான வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன. போக்குவரத்துப் பாதைகள் வெள்ளத்தில் மூழ்கிப்போயுள்ளன. போக்குவரத்துத் தடைப்பட்டமையால் இவர்கள் அங்கு சிக்கியிருந்தனர்.

## வரி விளம்பரம்

**வெற்றுப்போத்தல்கள் தேவை**

வெற்றுப் போன்விட்டா, மாமைட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜாம்புரோட்டிவேக்ஸ்பியர், கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால்கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ், (தனி) லிமிட்டெட், 14 சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-9054)

**தாமரைச்செல்வி எழுதிய ''தாகம்''**

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஏதோஒரு ''தாகம்'' இருக்கத்தான் செய்கின்றது. அந்த தாகம்தான் எத்தனையோஇன்னல்களுக்குமத்தியில் அவர்களை இயக்கிக் கொண்டிருக்கிறது. அருமையான நாவல் ''தாகம்'' படித்துப் பாருங்கள். (6998)

**மகாதேவா ஜோதிடம்**

குறிப்பு, அதிர்ஷ்ட எண் மாற்றம் ஆகியவற்றுக்கு ஜோதிடரை தினசரி 140, செல்லர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம். (7079)

**சாயி பாபா பொக்கற் கலண்டர்'94**

பாபாவின பல்வேறு படங்கள் பொக்கற் கலண்டராக வெளிவந்துள்ளன. மொத்தமாகவும். சில்லறையாகவும் கிடைக்குமிடம்: பகவான் மருந்தகம் 221, நாவலர்வீதி யாழ்ப்பாணம். (சி-8234)


## வீதிகள் திருத்தம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேசசபையைச் சேர்ந்த பல உள்வீதிகள் செப்பனிடப்பட்டு வரப்படுகின்றன.

சுழிபுரம், தொல்புரம், சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பல வீதிகளும் ஆகக் கூடுதலாக பழுதடைந்த சில வீதிகளும் திருத்தி செப்பனிடப்படுகின்றன. மேலும் வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்டு சிதைவுற்ற வீதிகள் விரைவில் செப்பனிடப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (41)

## அதிபர்கள் கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அதிபர்கள் அனைவரும் இப் பொதுக்கூட்டத்திற்கு சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றனர். இக்கூட்டத்தினை தொடர்ந்து தென்மராட்சி கொத்தணி அதிபர்களுக்கான கூட்டமும் இடம் பெறும். (86)


## தேவை

சமையல் அறை நிர்வாகி தேவைப்படுகிறார். முன் அனுபவம் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
விள. இல. 305
மே/பா ஈழநாதம்

(சி-8229)

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாராவின்

உணவுப்பார்சல்களை (மீன், மரக்கறி, இறைச்சி)
தினமும் காலை 11.45 முதல் பிற்பகல் 3.30 மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
சுண்டுக்குளி. (சி-8187)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி





| லெப். | 2-ம் லெப். |
|---|---|
| **நிலவண்ணன்** | **நாவல்லன்/பிரதீப்** |
| (கிறேசியஸ் ஆனந்த்) | (தர்மலிங்கம் சுரேஷ்) |
| 1-ம் குறுக்குத் தெரு, குருநகர். | தாவடி தெற்கு, கொக்குவில். |
| தாயின் மடியில் | தாயின் மடியில் |
| 25.07.1975 | 30.04.1971 |

வீரச்சாவு : 28.12.1992

(28-12-92 அன்று யாழ் மாவட்டத்தில் தெல்லிப் பழைப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்தார்கள்.)

களத்தில் மடிந்து காலம் கடந்தாலும்
விளக்குகளாம் இவர்களது வீரம் மறைந்திடுமோ!
துளைத்து அந்த சிங்களரை துரத்தி விட சென்றவரே
துளைத்து அடித்தோம் தூரமல்ல 'பூநகர்' களத்தினிலே
நடந்தது - விடுதலைக்காய்
உழைக்கும் எம் தலைவன் உங்கள் ஒளியில்
வெளிக்கும் தமிழீழம்

(சி-8254) - நண்பர்கள்

## நினைவுகூருகின்றோம்...

**1993-12-31**

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் சாம்பல்தீவுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,
**மதி-சக்கினா** (தாமோதரம் இராஜேந்திரன் - திருமலை)

குறிஞ்சாத்தீவுப்பகுதியில் இந்தியப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,
**லெப்.விசு** (இராசகோபால் ராஜ்குமார்-ஜெயந்திபுரம்-மட்டு)

காத்தான்குடிப்பகுதியில் சிறிலங்கா ஊர்க்காவற் படையினருடனான சமரின்போது இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,
**தனபால்** (தம்பிராசா கணேசலிங்கம்-வெல்லாவெளி-மட்டு)

தவறுதலான வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,
**மகேந்திரன்** (அலோசியஸ் மகேந்திரன்-வந்தாறுமூலை-மட்டு)

1988ஆம் ஆண்டு சுன்னாகத்தில் இந்தியப்படை மற்றும் தேசவிரோதிகளின் முகாம்மீதான தாக்குதலில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய,
**கப்டன் லோலோ** (தம்பிராசா சுரேஸ்குமார்-புன்னாலைக்கட்டுவன் வடக்கு-யாழ்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டு எமைப்பிரிந்த,
**வெளிச்சம் மோகன்** (ஆறுமுகம் விக்கினேஸ்வரன்-சிவப்பிரகாசம்வீதி, வண்ணார்பண்ணை யாழ்)

கொடிகாமம் பகுதியில்: இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,
**ரேகா** (அகஸ்ரின் பிலிப்கொன்சன்ரைன்-சாவகச்சேரி-யாழ்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் புனர்வாழ்வுக்கழக உடனடிப் பிரிவு அலுவலரான யாழ்-அரியாலை மகாவித்தியாலய வீதியைச்சேர்ந்த தமிழர்.

1990ஆம் ஆண்டு கிளாலிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் விமானத்திலிருந்து மேற்கொண்ட குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய,
**நந்தினி** (தேவிகா சின்னத்தம்பி-5-ம் வாய்க்கால் கிளிநொச்சி)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து தமிழகத்தில் சிகிச்சை பெறுகையில் வீரச்சாவெய்திய,
**கப்டன் றோய்** (சிற்றம்பலம் மகேந்திரராசா காங்கேசன்துறை-மயிலிட்டி)

1991ஆம் ஆண்டு திருமலை-கல்விமுந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சைக்காக வரும் வழியில் வீரச்சாவெய்திய,
**2-ம் லெப்.மதிச்செல்வம்-றீகன்** (இரத்தினம் மோகன்-மூதூர்-திருமலை)

திருமலை-குரங்கல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**சின்னவன்-இடைக்காடன்** (மூர்த்தி சீவரத்தினம்-ஆலங்கேணி, கிண்ணியா-திருமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8240)


புதுவருட சேவையில்

## வானவில்

தரம், சுவை, சுத்தம் குளிர்களி, குளிர்பான, சிற்றுண்டி வகைகளுக்கு

**வானவில் குளிர்பான நிலையம்**

- சிற்றுண்டி வகைகளை எந்நேரத்திலும் சுடச்சுட சுவைத்து மகிழ
- சுவைநயம்மிக்க சகலவித குளிர்களி, குளிர்பான வகைகளையும் பருகிச் சுவைக்க
- தரமான பாண், பஞ்சுமிட்டாஸ், பால்மா வகை, பிஸ்கற் வகைகளை

நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

குறைந்த விலையில் நிறைந்த சுவைகாண மறவாமல் வாருங்கள்

**வானவில் குளிர்பான நிலையம்**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி-8227)

# வடகொரிய அணுக்குண்டு மருமம்- மேற்குலகை சிக்கவைக்க வீசப்படும் வலை?

மீண்டும் உலக தலைப்புச் செய்திகளில் வடகொரியாவின் அணுகுண்டு விவகாரம் முதலிடத்தைப் பெறத் தொடங்கி விட்டது. அண்மையில் தனது நட்புநாடான தென்கொரியா வந்திருந்த சனாதிபதி கிளிண்டன் வழிக்கு வராவிட்டால் வடகொரியாவுக்கு அழிவே மிஞ்சும் என எச்சரித்தார்; யப்பான் அச்சம் தெரிவிக்கின்றது; சீனாவோ கவலை தெரிவிக்கின்றது; தென்கொரியாவோ இரண்டாம்கொரியப்போரை எந்நேரமும் வட கொரியா ஆரம்பிக்கலாம் என அலறுகின்றது; மேற்குலகின் சகல தொடர்புச் சாதனங்களும் வடகொரியா பற்றி அதன் அணுக்குண்டுபற்றி அச்சம் தரக்கூடிய வடிவமொன்றை உருவாக்கிவருகின்றன. அதன் தலைவரான கிம் இல் சுங்கை சர்வாதிகாரி என திட்டித் தீர்க்கின்றன. இவை எவை பற்றியும் வடகொரியா அதிகம் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. கடுகு சிறுத்தாலும் காரம் பெருதென்பது போல் 22மில்லியன் (2கோடி 20 இலட்சம்) மக்களைக் கொண்ட ஒரு சிறிய தனித்த நாடு இன்று உலகின் முழுக்கவனத்தையும் ஈர்த்து நிற்கின்றது. இச்சிக்கலை தீர்ப்பதற்காக நடுவராகச் செயற்பட விருப்பம் தெரிவிக்க அண்மையில் ஐ.நா.வின் செயலர் பூட்ரோஸ் காலி வடகொரியா வந்திருந்த போது அவருக்கு கிடைத்த பதில் ''எமக்கு ஐ.நா வின் மத்தியத்தம் தேவையில்லை நாமே நேரடியாக அமெரிக்காவோடு பேசிக் கொள்வோம் என்பது தான் பதில்.

இவ்வாறாக வடகொரியா தொடர்பாக பரபரப்பு ஏற்படுவதற்கு வடகொரியா எந்நேரமும் அணுக் குண்டொன்றை தயாரிக்கும் நிலையிலிருப்பதாக கருதப்படுவது தான் காரணம். உலகின் அச்சத்தை மேலும் அதிகரிக்கும் வகையிலேஇப்போது வட கொரியாவும்' நடந்து கொள்வதாக கருதப்படுகின்றது. ஏனென்றால் 1985ஆம் ஆண்டு அணுவாயுத பெருக்க தடை உடன்பாட்டில் வட கொரியா கைச்சாத்திட்ட போதும் 7 வருடங்களாக அது எவரையும் தனது யொங்பயொன் (Yong byon) எனுமிடத்திலுள்ள அணுவாலையை பரிசீலிக்க அனுமதிக்கவேயில்லை. 1992ஆம் ஆண்டே சருவதேச அணுச்சக்தி நிறுவன கண்காணிப்பாளரை அநுமதித்தது. எனினும் இவர்கள் கருத்துப்படி இவ்வாலையிலிருந்து பெறப்படும் அணுக் கழிவிலிருந்து புளுட்டோனியத்தை வட கொரியா தயாரிக்கக்கூடும் என்கிறஐயம் கிளப்பப்பட்டது, அதைவிட அமெரிக்காவின் உளவுசெய்மதியொன்றே இவ்அணுவாலைக்கு அண்மித்ததாக இரு உருமறைப்பு செய்யப்பட்ட நிலப் பகுதிகளை இனம் காட்டியது என்றும் அவை ரஷ்யாவிலுள்ள அணுக்கழிவு மையங்களை ஒத்ததாக தென்படுவதாக அமெரிக்கா கூறிவருகின்றது. எனவே குறைந்தது இரண்டு அணுக்குண்டுகட்கான புளுட்டோனியம் வடகொரியாவில் உண்டு என்றும் உளவு தகவல்கள் தெரிவிப்பதாக மேற்குலகம் கூறிவருகின்றது. அத்தோடு வட கொரியா ஏற்கனவே தயாரிக்கும் வல்லமை பெற்றுள்ள ஏவுகணைகள் 1000 கிலோ மீற்றர் வரை செல்லக்கூடியவை என்பதும் இவற்றில் அணுவாயுத அழிவுக் கருவிகள் பொருத்தப்பட்டால் அவற்றால் யப்பான், சீனா போன்ற நாடுகட்கே பெரும் ஆபத்து என்றும் கூறப்பட்டு வருவது மேலும் வடகொரியா குறித்தான அச்சம் இரட்டிப்பாகப் படக் காரணமாகிறது.

இவற்றினை விட அமெரிக்க பென்டகன் பாதுகாப்பு துறையின் முன்னைய ஆய்வொன்று (அண்மையில் வெளிப்படுத்தப்பட்டது) வட கொரியாவின் இராணுவ வல்லமை குறித்து ஆச்சரியப்படும் தகவல்களை வெளியிட்டுள்ளது. வடகொரியாவின் இராணுவ வல்லமை மிக உயர் தரத்தில் இருப்பதாகவும் குறுகிய நேரத்தில் மிகப் பெரும் தாக்குதலுக்கு தயாராகக் கூடிய வட கொரியப் படை தென் கொரியாவை இரண்டு வாரத்திற்குள் கைப்பற்ற முடியும் என்றும் இவ் அறிக்கை கூறுகின்றது. அத்தோடு அமெரிக்க உதவி வந்து சேர 6—8 வாரங்கள் எடுக்குமென்றும் பெருத்த அழிவுகளின் பின்னே, 6 மாதங்கள் போரிட்ட பின்னரே தென்கொரியாவை மீட்க முடியும் என்றும் இவ் அறிக்கை கூறுகின்றது இப்போதைய நிலவரப்படி தென் கொரியாவில் 6 1/2 இலட்சம் இராணுவமும் 35,000 அமெரிக்க துருப்பினரும் உள்ளனர். ஆனால் வடகொரியாவில் 1 மில்லியனுக்கு மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் உள்ளனர். உலகில் ஐந்தாவது பெரிய இராணுவமாக வடகொரிய இராணுவம் உள்ளதாகவும் தேவைப்படின் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரை ஆயுதம் தாங்கிய நிலைக்கு கொண்டுவர வடகொரியாவால் முடியும் என்று கூறப்படுகின்றது. போர் விமானங்கள், தாங்கிகள் எல்லாவற்றிலுமே தென் கொரியாவை விட பன்மடங்கு பலமுடையதாக விளங்கும் வடகொரியா தனது படைகளில் 70 வீதத்தை தென்கொரியா - வட கொரியாவை பிரிக்கும் இராணுவ சூனிய எல்லைப்பகுதியிலிருந்து 100 கிலோ மீற்றருக்குள்ளே வைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி ஏறத்தாள தென் கொரியாவின் தலைநகரான சியோல் இவ் ராணுவ சூனியப் பகுதியிலிருந்து 60 கிலோ மீற்றர் தொலைவிலிருப்பதே தென் கொரியாவின் அச்சத்திற்குப் பிரதான காரணமாகி விட்டது. அத்தோடு தென் கொரியாவிலோ அதன் அமெரிக்க போக்கிற்கு கடும் எதிர்ப்பையும் இரு கொரிய இணைப்பிற்கு பலத்த ஆதரவினைக் காட்டும் அமைப்புக்கள் பலவுண்டு. குறிப்பாக தென் கொரிய மாணவ அணியினர் இவ் வகையில் நீண்ட காலமாகவே தமது போராட்டத்தினைத் தொடர்ந்து வருகின்றனர். அதைவிட வட கொரியாவிற்கு ஆதரவாக இயங்கும் பல இரகசியக் குழுக்களும் இங்குண்டு எனவே இப்போது அமெரிக்காவிற்கு தனது நீண்டகால தென்கிழக்காசிய நண்பனை எவ்வாறு காப்பாற்றுவது என்கிற கவலை தோன்றியுள்ளது. ஏனென்றால் இரண்டாம் உலகப் போரின் பின்னான வல்லரசுகளின் கெடுபிடிப் போட்டியில் கொரியத் தீபகற்பம் இரண்டு கொரியாக்களாகியதும் தென்கொரியா அமெரிக்கப் பாதுகாப்பு பராமரிப்பிலிருப்பதும் தெரிந்த விடயமே.

> ''உலகிலே
> மிக அதிசயமான நாடு
> வடகொரியா
> எத்தகைய தடைகள்
> எவர் விதித்தாலும்
> அவற்றையே படிக்கற்களாக்கி
> உயிர் வாழ்வது
> மட்டுமன்றி
> உயரும் தன்மையும்
> கொண்டது.
> ஏனென்றால் எப்போதுமே
> பிறரைச் சாராது
> சொந்தக்காலில் நிற்றல்
> தனது தலைவிதிக்கு
> தானே பொறுப்பாக இருத்தல் –
> இது வட கொரியரின்
> வாழ்க்கைத் தத்துவம்''

எனவே வழக்கம் போல் தொடக்கத்தில்இறுமாப்பாக எச்சரிக்கை தொனியில் B52 விமானங்கள் மூலம் குண்டு வீசுவது பற்றி அமெரிக்க அதிகாரிகள் பேசினர்.

ஆனால் அவர்களின் சுருதி இப்போது குறைந்துவிட்டது. ஏனென்றால் நடைமுறைக்கு இவையெல்லாம் இன்று ஒத்துவராத சங்கதிகளாகிவிட்டன. ஏனென்றால் வடகொரிய நிலச் சுரங்கங்கள் மிகப் பாதுகாப்பானவை என்பதால் இவற்றில் எங்காவது தனது அணுகுண்டு தயாரிப்பு வல்லமைகளை மறைத்து வைக்க முடியும். மேலும் அப்படியே குண்டு வீச்சுக்கள் நடத்தினாலும் அழிக்கப்படப்போகும் அணுவாலையிலிருந்து வெளியாகப் போகும் கதிர் வீச்சு அபாயம் கொரியாவின் அண்டை நாடுகளான அமெரிக்க நட்புறவு நாடுகளைப் பெரிதும் பாதிக்கும் அத்தோடு இவ் விடயத்தில் வளைகுடாப் போர் அனுபவம் அமெரிக்காவிற்கு தக்க பாடமாகி விட்டது. ஏனென்றால் இது வரை ஏறாத்தாழ 8,000க்கு மேற்பட்ட வளைகுடாப் போரில் கலந்து கொண்ட அமெரிக்க போர் வீரர்கள் வேதியல் நச்சுப் பொருள் தாக்க நோயொன்றால் பீடிக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இதற்கான காரணம் இதுவரை சரியாகக் காணப்படாத போதும் அமெரிக்காவால் குண்டுவீசி அழிக்கப்பட்ட ஈராக்கின் வேதியல் படைத்தள ஆலைக் கசிவால் இந்நோய் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.)

எனவே அமெரிக்கா அதிரடி நடவடிக்கைகளை கைவிட்டு அமைதி வழியில் பேச்சுக்களை நடாத்துகின்றது. வட கொரிய விருப்பப்படி அமெரிக்க உயர்மட்டக் குழுவொன்று இப்போது வடகொரியரோடு பேசி வருகின்றது ஒரு முடிவும் எட்டப்படாத நிலையில் பொருளாதார தடை விதிப்பது பற்றி பேச்சுக்கள் அடிபடுகின்றது. வடகொரியப் பொருளாதாரம் மிக மோசமாக இருப்பதாக அங்கு அடிக்கடி உணவுகோரி மக்கள் கிளர்ச்சிகள் செய்வதாக செய்திகள் வெளிப்பட்டாலும் இவற்றின் நம்பகத்தன்மை குறித்து 'நியுஸ்விக்' போன்ற சஞ்சிகைகளே கேள்வி எழுப்புகின்றன: ஏனென்றால் வடகொரியாவின் உண்மை நிலை எவர்க்கும் தெரியாதென்பதோடு வட கொரியா இதுவரை தனது பொருளாதார நிலை பற்றி எத்தகைய புள்ளி விபரங்களையும் வெளியிட்டதும் கிடையாது என்பதும்தென்கொரியாதனது பிரசார நோக்கத்திற்காக பொய்த் தகவல்களை அளிப்பது வழக்கமாகிவிட்டது என்றும் நியுஸ்விக்கே கூறுகின்றது. மேலும் வட கொரியாவோடு இன்று அதிகம் உறவுகளை வைத்திருக்கும் ஒரே நாடான சீனாவின் போக்கும் இவ்விடயத்தில் அமெரிக்காவிற்கு புரியவில்லை. ஐ.நாவில் தனது தடுப்புரிமையை பயன்படுத்தி சீனா வட கொரியாவிற்கு எதிரான பொருளாதாரத் தடையை தடுத்து விடுமோ என்ற ஐயமும் அமெரிக்காவிற்கு இருப்பதால் இப்போது சீனாவையையும் வழிக்கு கொண்டு வர வேண்டியுள்ளது.

எனவே வடகொரியாவின் உறுதியானநிலைப்பாடு காரணமாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வட கொரியா விரும்புவதை வழங்க தயாராக இருப்பதாக கூறப்படுகின்றது. ஏனெனில் பொருளாதாரத் தடை விதித்தாலும் அது வடகொரியாவைப் பொறுத்த வரையில் எப்பலனும் தராது என்றே வட கொரியா பற்றிய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள் ''தடை விதிக்கப்பட்டாலும் வடகொரியா தடை தாண்டி உயிர் வாழும் அதுமட்டுமன்றிமேலும் அந்நாடு உறுதியாக முன்னேற தடை வழிவகுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' என பிரபல ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். எனவே வடகொரியா விரும்பும் விதமாக வட கொரியாவுக்கு கூடிய அங்கீகாரம் வழங்கல், சுயவர்த்தக சலுகைகளைவழங்கல், தென் கொரியாவோடான கூட்டு இராணுவ ஒத்திகைகளை நிறுத்தல் என பலவற்றைச் செய்ய அமெரிக்கா தயாராகிவிட்டது. இதற்குப்பதிலாக வட கொரியா செய்யவேண்டியதுஎல்லாம் தனது அணுவாலையை சருவதேச அணு சக்தி நிறுவன ஆய்வாளர் பரிசீலிக்க அனுமதித்தல் மட்டுமே. இது தொடர்பில் கிம் இல் சுங்கோ அல்லது தற்போது நாளாந்த நிருவாகத்திற்கும் வட கொரிய பாதுகாப்புப் படைகளின்பிரதான தளபதியாக விருக்கும் அவரின் மகனான கிம்யோங் இல் (Kim Jong Il)எவ்வித முடிவையும் இதுவரை தெரிவிக்கவில்லை. அதே சமயம் அவ்வாறு அனுமதித்தாலும் என்னபெரிதாக வடகொரியா ஆலையில் கண்டு பிடிக்கப்பட முடியும் என்கிற கேள்வியும் இப்போது எழுப்பப்படுகின்றது. இவ்வாறாகவடகொரிய விவகாரம் தொடர்கதையாக தொடர்கின்றது.

இவ்வாறாக சிக்கலானவடகொரிய விவகாரத்தில் முக்கியமான செய்தியொன்று பின்னணியாக உண்டு. ஏறத்தாழ 45 வருடங்கட்கு மேலாக வட கொரியாவில் அதன் மூத்த தலைவர் கிம் இல் சுங்காலும் எவ்விடயத்திலும் தமது நிலைப்பாட்டினை மிக்க உறுதியோடு முன்னெடுத்து எவ்வாறு செல்ல முடிகின்றது?

தனக்கு எதிராக பொருளாதாரத்தடைவிதிப்பதென்பது தனக்கு எதிராக போரின் ஒரு நடவடிக்கையாக கருதப்படும் என எவ்வாறு கடும் எச்சரிக்கைவிட முடிகின்றது. கசப்பாக இருந்தாலும் மேற்குலகமேசீரணிக்கவேண்டிய செய்தி இது. 1955களின் பின்னான தனது கொள்கைகளை பிறரைச் சாராது சொந்தக் காலில் நிற்றல், தமது தலைவிதிக்கு தாமே பொறுப்பாக இருத்தல் என மிக்க உறுதியாக கிம் இல் சுங்காய் கடைப்பிடிக்கப்பட்டு அதை உள்வாங்கி அதை ஏற்று நாட்டிற்காக தம்மை முழுமையாக ஈடுபடுத்தும் மக்கள் சமுதாயமொன்றை கிம் உருவாக்கி விட்டதாக ஆய்வாளர் கூறுகின்றனர். பல்வேறு கால கட்டங்களில் வட கொரியா சோவியத் முகாமின் அழுத்தங்கட்கும் பணியாது தனித்து நின்றிருக்கின்றது வட கொரிய மக்கள் நாளொன்றிற்கு 12 மணித்தியாலங்கள் நாட்டிற்காக உழைக்க எப்போதுமே தயங்கியது கிடையாது. எனவே முடிந்தளவு நாட்டின் இராணுவ பொருளாதார துறைகளை சுயசார்புள்ளதாக்கி அரசியல் சுதந்திரம் உள்ள தனித்த நாடாக வட கொரியா விளங்குகின்றது. எனினும் கால மாறுதற்கேற்ப வட கொரியாவும் வளைந்து கொடுக்க தவறவேயில்லை.

1988களின் பின்னர் தென் கொரியாவோடு உறவுகளை ஏற்படுத்தியமை ஐ.நாவின் அங்கத்துவம் பெற்றமை, நாட்டின் விசேட சுதந்திர வர்த்தக வலயங்களை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கென அமைத்தமை என சில சீர்திருத்தங்களை செய்ய அனுமதியை கிம் இல் சுங் வழங்கியிருக்கிறார்-

எனவே தனது தலை விதியை பிறர் கையில் விடாது தானே தீர்மானிக்கும் வட கொரியா தொடர்பாக உலகம் இரண்டே முடிவுகளை மட்டுமே இப்போது எடுக்க முடியும். ஒன்று அணுக்குண்டு வல்லமையுள்ள வடகொரியாவோடு உலகம் வளரப் பழகிக் கொள்ள வேண்டும். அல்லது அதன் அணுகுண்டு தயாரிக்கும் வல்லமையை அழிக்க வேண்டும். ஆனால் பின்னது மிக்க ஆபத்தானதும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் எவரும் இதைச் செய்ய துணியமாட்டார்கள் என்பதே இன்றைய நிலை.

பாலகுமாரன்

# வளர்முக நாடுகளில் மலேரியா

# சீனாவின் முன்னுதாரணம்

மதன்

வளர்முக நாடுகளில் பல தலைமுறைகளாக மலேரியா நோய் நிலவி வருவது தெரிந்த விஷயம். மலேரியாக் காய்ச்சல் வளர்முக நாடுகளில் உயிர் கொல்லி நோயாகவும் உள்ளது. இப்பொழுது இந்த நோய் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது என்று கூறப்படுகிறது. மலேரியாக் காய்ச்சல். கட்டுப்படுத்தப்பட்டு விட்டது என்பது பெயரளவில் உள்ளதே அல்லாமல், அது உண்மையான, முழுமையான நோய்க் கட்டுப்பாடு என்று கருத முடியாது. அண்மைய ஆண்டுகளில் இந்தநோய் மிக வேகமாகப் பரவி வருகிறது. நோய் எவ்வளவு வேகமாக பரவி வருகிறதோ, அந்த அளவுக்கு நோய்த்தடுப்பு முறைகள் இல்லை. பலர் ஆயிரக்கணக்கில் இறக்கும் பரிதாப நிலைக்கும் மலேரியா நோய் காரணமாக உள்ளது.

எல்லோரும் உடல் நலத்தோடு வாழ வேண்டும் என்பதற்காகச் சுகாதார நிறுவனங்கள் பணி செய்ய வேண்டும் என்பதே தத்துவ விளக்கம். சுகாதாரத்தை நாம் பேணினால் தான் அது நம்மைக் காப்பாற்றும். ஆனால் வளர்முக நாடுகளில் இந்த இலட்சிய நோக்கில் சொல்லும் செயலும் ஒன்றுபட்டு விளங்கவில்லை. சுட்ட மண்ணும் சுடாத மண்ணுமாகவே இருக்கிறது. நோய் தொடங்கிய பிறகுதான் நிவாரண மருந்து வகைகள் கொடுப்பதும், அறிவுறுத்தல் பிரசுரங்கள் அறிக்கைகள் வெளியிடுவதும, நோய் தடுப்புப் பணிகளில் கையை நனைப்பதும் வளர்முக நாடுகளில் வழமை. ஆற்று வெள்ளத்தில் நூற்றுக்கணக்கானோர் மூழ்கிக் கொண்டிருக்கும் போது அணை கட்டுவது போன்றது தான் இந்தப் பணி. இதனை உலக சுகாதார ஸ்தாபன (W.H O) அறிக்கைகளே ஊர்ஜிதம் செய்துள்ளன.

உஷ்ண மண்டல நோய்களில் (Tropical diseases) மலேரியாக் காய்ச்சல் ஆபத்தை உண்டாக்கும் நோயாகவே கருதப்படுகிறது. உலகில் வருடந்தோறும் ஒரு மில்லியனுக்கு அதிகமானவர்கள் இந்நோயினால் செத்து மடிகிறார்கள். 100 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் மலேரியாக் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுகிறார்கள். இந்த நோயினால் ஆபத்து என்னவென்றால், இந்நோய் வளர்ந்தோர்களிலும் பார்க்க சிறுவர்களிடம் அதிகமாக ஏற்படுகிறது.

'அதெல்லாம் ஒன்றுமில்லை. மலத்தியோன் தெளித்தால் மலேரியாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்' என்ற தவறான எண்ணக்கருவும் வளர்முக நாடுகளில் நிலவுகின்றது. மலத்தியோன் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தாது. மலேரியாவை முழுதும் அழிக்க நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இந்தநோய் வேகமாகப் பரவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய ஆய்வு அறிக்கை ஒன்று கூறுகிறது.

## மலேரியாத் தடுப்பு முறைகள்

வளர்முக நாடுகளில் நாட்டுக்கு நாடு மலேரியாத் தடுப்பு முறைகளில் வேறுபாடுகள் உள்ளன. ஒரு சமச்சீரான முறை பின்பற்றப்படுவதில்லை. இன்னும் சில நாடுகளில் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகள் தாமதமாகத் தான் தொடங்கப்பட்டன. நுளம்புகளை அழித்தல், நுளம்புகள் வளரக்கூடிய நீர் நிலையங்களிலும் குழிகளிலும் எண்ணெய் தெளித்தல், நீர் தேங்கி நில்லாமல் கான் வழியாக வழிந்தோடச் செய்தல், நுளம்பு பருவங்களை உண்ணக்கூடிய இன மீன் வகைகளை வளர்த்தல், நுளம்பு வலை உபயோகம, புகை போடுதல், மலத்தியோன் தெளித்தல் ஆகிய தடுப்பு முறைகளே பெரும்பாலான வளர்முக நாடுகளில் நடைமுறையில் உள்ளன. வளர்முக நாடுகளில் இந்தத் தடுப்பு முறைகள் கைகொடுத்தனவா? வியட்னாம் யுத்த காலத்தில் டி. டி. ரிக்கு நுளம்புகள் எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொண்டதால் அது பயனற்றது என்று உலக சுகாதார ஸ்தாபனம் அப்போதே உறுதி செய்துவிட்டது. அது மட்டுமல்ல

1950 நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மலேரியா ஒழிப்புத் திட்டம் பின்வரும் காரணங்களினால் தோல்வியில் முடிந்தது என்று உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது

— பல உஷ்ண வலய நாடுளில் மலேரியா அழிக்கப்பட்ட பிறகு மலேரியாக் காய்ச்சல் மீளப்பரவுதலை தடுக்க உதவும் ஏற்பாடான நிலை தொடர்ச்சியாகப் பேணப்படுவதில்லை.

— மலேரியாவை அழிப்பதற்குக் கைகொடுத்து உதவும் அடிப்படைச் சுகாதார வசதிகள் எவ்வளவு தீவிரமாகப் பேணப்பட வேண்டுமோ, அந்த அளவுக்குப் பேணப்படுவதில்லை.

— இப்போது மலேரியாவை அழிக்கத் தெளிக்கப்படும் கிருமி நாசினிகளுக்கு மலேரியா ஒட்டுயிரிகள் (ஒட்டுண்ணி - parasites) எதிர்த்து உயிர்வாழும் சக்தியைப் படிப்படியாக விருத்தி செய்து கொண்டுள்ளன.

ஆகவே வளர்முக நாடுகள் பலவற்றில் இப்போது பின்பற்றப்படும் மலேரியா தடுப்பு முறைகளில் ஒருநிச்சயமின்மை நிலவுகிறது. இதற்குக் காரணம் என்ன? நுளம்புக்கட்டுப்பாட்டுக்காகத் தெளிக்கப்படும் மருந்துகள் ஒருபுறமிருக்க, சம்பந்தப்பட்ட வளர்முக நாடுகள் மலேரியாத் தடுப்பு முறைகளைப் பயன்படுத்துவதில் உள்ள அக்கறையின்மையும் ஒரு காரணம் என்பது தான் உண்மை என அனுமானிக்க முடிகிறது.

## மலேரியாக் காய்ச்சல்

மலேரியாவின் வளர்ச்சிவேகம் மிகவும் சுலபமானது. பிளஸ்மோடியம் என்னும் ஒண்டுயிரிகளால் பீடிக்கப்பட்ட அனோபிலிஸ் பெண் நுளம்புகள் பெரும்பாலும் இரவு வேளைகளில் மனிதனைத் தீண்டுகின்றன. அத்துடன் அனோபிலிஸ் நுளம்புகள் ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனுக்கும் இந்த நோயைக் காவுகின்றன. நுளம்பு கடிக்கும் போது நோய்க் கிருமிகளும் உடலினுள் செலுத்தப்படுகின்றன. அடுத்தாற்போல் அது மனிதனின் இரத்தச் சுற்றோட்டத்தில் கலந்து ஈரலைச் சென்றடைகின்றன. ஈரலில் இக்கிருமிகள் பல்கிப் பெருகும். பின் செங்குருதிக் கலங்களிலும் பல்லாயிரக் கணக்கில் பெருகும். செங்குருதிக் கலங்களிலிருந்து கிருமிகள் வெளியேறும் போது நச்சுப் பதார்த்தம் வெளியேறுவதால் மலேரியாக் காய்ச்சல் உண்டாகிறது. பிளஸ்மோடியம் ஒண்டுயிரிகளால் மலேரியாக் காய்ச்சல் ஏற்பட்டு அது ஒழுங்கற்று பலமுறை வருமானால், அது மூளை மலேரியாக் காய்ச்சலுக்கு வழிவகுக்கும். இது உயிருக்கே உலை வைக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

> **1953-இல் சீனாவின் குடிமக்களில் 93 சத விகிதமானோர் மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயே வாழ்ந்தனர். 1990 முதல் 90 சத விகிதமான சீன மக்கள் மலேரியாவிலிருந்து விடுபட்ட பகுதிகளிலேயே வாழ்கின்றனர்.**

மலேரியா நோய் சிறுவர்களையும், கர்ப்பிணிகளையும் தாக்கும் போது அது உடல் சீர்கேட்டுக்கும், இரத்தச் சோகைக்கும் வழி வகுக்கின்றது. இவர்களுக்குப் பரவலாக வேறு நோய்கள் தாக்குவதும் இலகுவானது. சிறுவர்களின் உடல்நலம் மற்றும் ஆரோக்கியம் கெடுவதால் வளர்முக நாடுகளில் பாடசாலைவரவுச் சராசரி பெரிதும் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆபிரிக்காவின் வறண்ட பகுதிகளில் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுபவர்களில் ஐம்பது சத விகிதமானவர்கள் மலேரியாவினால் பீடிக்கப்பட்டவர்கள் என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் உஷ்ண மண்டல நோய்ப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பீற்றர் டி. நடாட் தெரிவித்துள்ளார். குறிப்பாக ஆபிரிக்காவிலும், மற்றைய வளர்முக நாடுகளிலும் மலேரியாக் காய்ச்சல் பல முறை கண்டு எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொண்டவர்களும் நோய் காவிகளாகக் காணப்படுகிறார்கள். இந்த நிலையில் நுளம்புப் பெருக்கத்தை மாத்திரம் கட்டுப்படுத்துவது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தலாம். காரணம், மலேரியாக் கிருமிகள் உள்ளவர்கள் காலப்போக்கில் எதிர்ப்புச் சக்தியைத் தானாகவே இழந்து விடும்போது, மலேரியாப் பெருக்கம் இவர்கள் மூலமாகவும் ஏற்படுகின்றது. ஆபிரிக்காவின் 530 மில்லியன் ஜனத்தொகையில் 275 மில்லியன் பேருக்கு மலேரியா ஒண்டுயிரிகள் இரத்தத்தில் கலந்திருப்பதாக மருத்துவ ஆய்வுகளிலிருந்து தெரிய வருகிறது.

## போர்க்காலச்சூழலும் மலேரியாவும்

போர்க்காலச் சூழலில் மக்கள் சமூகத்தின் கட்டமைப்புக் குலைகிறது. மக்கள் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் போது புறச் சுகாதாரம் சிக்கலாகிறது, அல்லது சுகாதார சேவைகள் தடைப்படுகின்றன. இதற்குச் சம்பந்தப்பட்ட அரசுகளின் மாற்றாந்தாய் மனப்பான்மையும் ஒரு காரணமாக அமைகிறது. இது குறித்து ஆராயப்பட்டுள்ளது. ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் உள்நாட்டுப் போர் அல்லது கலகங்களினால் மலேரியாநோய் அதிகரித்துள்ளமை தெரியவருகிறது. ஆப்கானிஸ்தானில் நிலவும் யுத்தக்கெடுபிடி நிலை காரணமாக 1983 இல் 12,000 ஆக இருந்த மலேரியா நோயாளரின் எண்ணிக்கை 1990 இல் 3,20,000 ஆகஉயர்ந்துள்ளது கம்போடியாவிலும் இதே நிலைதான். இங்கு ஆண்டொன்றுக்கு மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை சுமார் 2,00,000 இந்த எண்ணிக்கை இப்போது 5,00,000 ஆக உயர்ந்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளுக்கு அடுத்தாற் போல் ஏனைய வளர்முக நாடுகளில் ஆண்டொன்றுக்கு 5 முதல் 6 மில்லியன் பேர் மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் 75 விகிதமானவர்கள் இலங்கை, இந்தியா, ஆப்கானிஸ்தான், பிறேசில், கம்போடியா, இந்தோனிசியா, வியத்நாம், தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் நகரமயமாக்கல், சுற்றாடல் மாசடைதல், வேளாண்மைச் செய்கைக்காக காடுகளை அழிப்பதால் இயற்கையின் சமநிலை கெடுகிறது. இதனால் அனோபிலிஸ் நுளம்புகள் பெருக்கம் ஏற்படுகின்றது. உதாரணமாக, கிழக்கு ஆபிரிக்கமேட்டு நிலங்களில் வேளாண்மைக்காகக் காடுகள் அழிக்கப்பட்டதால் அந்த நிலங்களில் குளிர் குறைந்து பிளஸ்மோடியம் என்னும் ஒண்டுயிரி பெருகுவதாக அனுமானிக்கப்படுகிறது.

கொலம்பஸுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக தென் அமெரிக்க நாடுகளில் காய்ச்சலுக்கு மருந்தாகப் பாவிக்கப்பட்ட குயினைஸ் மலேரியாவுக்குக் கைகண்ட மருந்தாக உபயோகிக்கப்பட்டது. 1940களில் குளோரோக்குயிஸ் அறிமுகமாகியது. இன்று பிறிமாக்குயிஸ், மெபாகிரின், பாலூட்றிஸ் ஆகிய மருந்து வகைகள் மலேரியா நோயாளருக்கு வழங்கப்படுகின்றன. இந்த மருந்து வகைகளுக்கும் நுளம்புகள் எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொண்டுள்ளன. இதனால் மலேரியசக் கட்டுப்பாடு எதிர்பார்த்தபடி நிறைவேறாமல் போகிறது. மலிவு விலையில் தயாரிக்கப்படும் குயினைஸ் வில்லைகளை மீளவும் நாடுமளவுக்குப் பொருளாதார வகையில் பின் தங்கிய வளர்முக நாடுகள் தள்ளப்பட்டுள்ளன. இது இவ்வாறிருக்க, பல ஆண்டுகளாகப் பாவனையில் உள்ள நுளம்புத் திரிகளுக்கும் நுளம்புகள் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கியுள்ளன. இந்த நிலையில் யாழ். குடாநாட்டில் சில கிராமங்களில் கையான் தகரைச்செடி நுளம்புகள் வெறுக்கும் புகையை உண்டாக்கப் பயன்படுத்தப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

விலை உயர்ந்த சிறந்த மலேரியா மருந்து வகைகள் வளர்முக நாடுகளில் உள்ள ஏழைகளுக்கு எட்டாக் கனியாகவே உள்ளன. மலேரியாவால் பீடிக்கப்படும் நாடுகள் பொருளாதார நிலையில்பின் தங்கிய நாடுகள், மருந்துகளை உற்பத்தி செய்யும் பன்னாட்டு நிறுவனங்கள், மருந்துகளை சந்தைப்படுத்த முடியாதலால் மலேரியா தடுப்பு மருந்து வகைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதில்லை என்பது கவலைக்குரிய விஷயமாகும். இலாப நோக்கிலேயே செயலாற்றுகின்றன. வளர்முக நாடுகளில் சுகாதார சேவைகள் நன்கு ஒழுங்கமைக்கப்படாமையினால் ஏனோதானோ என்ற வகையிலேயே சேவைகளில் ஈடுபட்டுள்ளன. நோயாளர் சொந்தச் செலவிலேயே மருந்துகளை வாங்கவேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர். பணப்பற்றாக்குறை காரணமாக மலேரியா நோயாளர் அரைகுறையாகச் சிகிச்சை பெறுவதால், மலேரியாக் காய்ச்சல் மீளவும் ஏற்படுகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம் கிருமி நாசினியில் தோய்த்த புதிய நுளம்பு வலையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனைப் பாவிப்பதால் மலேரியாவால் சாகும் சிறுவர்களின் எண்ணிக்கையை 70 விகிதத்தில் குறைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நுளம்பு வலைகள் இப்போது சீனாவிலும், ஆபிரிக்காவிலும் பரீட்சார்த்தமாக உபயோகத்தில் உள்ளன.

## சீனாவின் முன்னுதாரணம்

சீனா இந்த வியாதியை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் உலகளாவிய ரீதியில் மலேரியாக் கட்டுப்பாட்டுநடவடிக்கையில் இறங்க முன்னரே சீனா இத்துறையில் வெற்றிகரமாகக் காலடி எடுத்து வைத்துள்ளது. 1953 - இல் சீனாவின் குடிமக்களில் 93 சதவிகிதமானோர் மலேரியாவால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயே வாழ்ந்தனர். 1990 முதல் 90 சதவிகிதமான சீன மக்கள் மலேரியா நோயிலிருந்து விடுபட்ட பகுதிகளிலேயே வாழ்கின்றனர். இந்த அசாத்தியம் எவ்வாறு சாத்தியமாயிற்று? சீனாவில் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகள் வருமாறு:

— அரசியல்அர்ப்பணிப்பு.

— முகாமைத்துவப் பரவலாக்கல்.

— வியாதி கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சைக்கு முன்னுரிமை.

— நுளம்புக் கட்டுப்பாடு மற்றும் புறச்சூழலைப் பாதுகாப்பதில் சமூகம் ஒத்திசைவாக இயங்குதல்.

— உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப வழிமுறைகளை வகுத்தல்.

— சனத் தொகைக்கான சுகாதாரக் கல்வி அறிவு.

கிட்டத்தட்ட சீனாவைப் போன்ற திட்டங்களை அமுல்படுத்திய மெக்சிக்கோவும், புறூண்டியும் மலேரியாவைக் கட்டுப்படுத்துவதில் வெற்றியீட்டியுள்ளன.

சீனாவின் இந்த முறையைப் பயன்படுத்துவது எளிது. சீனாவின் உதாரணம் மற்ற நாடுகளுக்கும் ஒரு பாடத்தைக் கற்றுத் தரக்கூடியது.

(சிறுகதை)

# மெழுகுவர்த்திகள்

காற்றின் வேகம் சைக்கிளை ஓடவிடாமல் பின் தள்ளித் தடுத்தது. வழமையாக, மனதிற்கு சிலிர்ப்பைத் தரும் மெல்லிய மழைத்தூறல் இப்போது எரிச்சலைத் தந்தது. மேடு, பள்ளமான வீதியில் ஏறி இறங்கிய சைக்கிளால் தெறித்த மழை வெள்ளம், காற்சட்டையில் மண்ணிறமாய் பட்டு வடிய, காற்றிற்கெதிராக ஈடு கொடுத்து ஓடத் தொடங்கினேன்.

தொடர்ந்துசில நாட்களாக, தெல்லிப்பழைப் பகுதி இராணுவத்தினர்இடைவிடாமல் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்வதன் காரணத்தை செய்தியாக்கும் ஆர்வம், செய்தியாளன் என்ற முறையில் களைப்பையும் மீறி ஓட வைத்தது. மல்லாகம் சந்தி கழிந்து, கொஞ்சம் கொஞ்சமாய் சன நடமாட்டம் குறைந்து செல்லும் வீதி. மாலை ஐந்து மணியையும் கடந்திருக்க வேண்டும். பகலில் மட்டும் தங்கள், தங்கள் வீடுகளுக்கு செல்லும் மக்கள், இரவில் பாதுகாப்பான இடங்கள் தேடி வந்து கொண்டிருந்தனர்.

முன்பு சன நடமாட்டமாயும், வ கனங்களின் போக்கு வரவாயும் இருக்கும் வீதி, அமைதியாய் நீண்டுகிடந்தது. துர்க்கையம்மன் ஆலய சுற்பூரத்தட்டு மாத்திரம் தெரிந்தது. இங்கே இருந்த சுச்சான் கடைகள் எங்கே? வீதி கொள்ளாத சனக்கூட்டம் எங்கே? தொலைந்து போன மண்ணின் மகிழ்ச்சி, மண்ணின் வாசனை மட்டும் மாறாமல் காற்றோடு கலந்து வந்தது.

புழுதிபட்டுக் கிடந்த மண்ணில், விழுந்த மழைத்தூறல் எழுப்பும் மண் வாசனை எத்தனை பேர் சொல்லிச் சென்றாலும், அது நுகரப்படும்போது ஏற்படும் சந்தோஷம் அந்த வாசனை சொல்லித் தரும், தாய்மண்ணின் சிலிர்ப்பு இப்போதும் காற்றோடு வந்தது.

கோயிலைத் தாண்டித் தெரியும் வைத்தியசாலை, காடாய் அடர்ந்து கிடக்கும் பற்றைகள் அளைந்து விளையாட ஆளில்லாமால், உயர்ந்து வளர்ந்த புற்கள் அதையும் மீறி தூரத்தே தெரியும் பனங்கூடல்கள் தனிமைச்சிறையில் வாடும் கைதி அறிந்தவனைப் பார்த்து ஆனந்தப்படுவதுபோல் அந்தப் பனைகளும் சற்றே அசைந்து இங்கே கை காட்டுகின்றனவோ?

வீதியை மறைத்து உயர்ந்திருக்கும் தடுப்புகள் சைக்கிளை விட்டிறங்கி உருட்டிச் செல்கிறேன் வீதியிலிருந்து இறங்கிச் சென்றும் ஒழுங்கை அருகிலிருக்கும் வீடு தான்.

என்னை ஒருவரையும் காணவில்லை யென்று கண்களைத் துளாவினேன்.

''அண்ணை யாரைத்தேடிறீங்கள்'' வீதிக்கு அப் பாலிருந்த திறந்த பங்கரின் மேல் றைபிளை மடியில் வைத்தபடி கண்களைஊடுருவியவாறுகேட்டான் நான் வந்தவிபரத்தைக் கூறினேன். 'உள்ளுக்கு இருங்கோ பொறுப்பாளர் வரட்டும் அவர் வடிவாக சொல்லுவார்'' என்றபடி அருகில் வந்து கூட்டிச் சென்றான்.

முன் விறாந்தையிலிருந்த வாங்கில் அமர்ந்தேன் அவன் வாசலருகே நின்றான். அவன் பார்வை, முன்நோக்கி நிலைத்திருந்தது.

மழைத்தூறல் சற்று வலுத்தும், நிறைும் விளையாட்டுக் காட்டிக் கொண்டு நின்றது பின்னேர கொஞ்ச வெளிச்சத்தையும் மழை இருட்டு விழுங்கிக் கொண்டிருந்தது. மெதுவான குளிர்காற்று மயிர்க்கால்களை புல்லரிக்க வைத்தது. கைகளை குறுக்கிக் கட்டிக் கொண்டுஅவனைப் பார்த்தேன் இப்போதும் அவன் பார்வை மாறவில்லை.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. தூறல் சற்றுப்பெருத்து மழையாக மாறியது காற்றின் வீச்சும் அதிகரித்தது ''யாழ்ப்பாணத்திலயும் புயல் அடிக்குமாம் நீர் றேடியோ கேட்டனீரா?'' அவன் தலையை மட்டும் ஆட்டி இல்லை என்பது போல் செய்துவிட்டு அங்கேயே பார்வையை நிலைத்துக் கொண்டான் தம்பி, இன்னமும் வரக் காணயில்லை? என்று மீண்டும் கதையைக்கொடுத்தேன் 'பொயின்றுகளைப் பார்க்க போனவர், வந்திடுவார்'' என்றான்.

வாகனமொன்றின் இரைச்சல், தூரத்திலிருந்து அதிகரித்து வரும் சத்தம். தயங்கியபடி '' தம்பி,வாகனங்கள் ஓடுறது அவங்களுக்குக் கேக்காதே ? '' என்று கேட்டேன்

''இது அவங்கட வாகனங்கள் ஓர்ற சத்தம் அண்ணை''

''அப்ப பயமில்லையா உங்களுக்கு ?'' இது நான். திரும்பிப் பார்த்தான். தனக்குள் சிரித்தபடி மீண்டும் அதே ஊருடுவலானபார்வை.

வெளி கேற்றடியில் ஏதோ அரவம் கேட்டது மழையில் நனைந்தவாறு ஒரு சிறிய உருவம் இவனைக் கண்டதும் சந்தோஷத்தோடு ஓடி வந்தது. போட்டிருந்த பச்சை நிற யூனிபோர்ம், தொப்பலாய் நனைந்து, தலைமயிர் கலைந்து, கையினால் தலையைச் சிலிர்த்து தட்டியபடி வந்தான் பொலித்தீனால் மூடப்பட்ட றைபிளை வாங்கில் வைத்தவன், என்னைப் பார்த்து சிநேகமாய்ச் சிரித்தான்.

மீசை அரும்பக்கூட இல்லை ''சாப்பிட என்ன இருக்கு' அதே ஈர உடையைத் தட்டியபடி கேட்டான் ''மத்தியானம் சாப்பிடயில்லையா? வாசலில் நின்றவன் கேட்க, பதில் கூறாது அறைக்குள்ளே நுழைந்தான். தம்பியிண்ட வயசுதான் இருக்கும். எனக்குள் எண்ணினேன்.

அவன்நடந்துசென்றபாதை ரயில்,ஈரச்சப்பாத்தின் அடிகள் குனிந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். ''அண்ணை சாப்பிட்டீங்களா ? கையில் பார்சலோடு வந்து கொண்டே கேட்டான். ''ஓமப்பன், நான் அப்பவே சாப்பிட்டன், பரவாயில்லை நீர் சாப்பிடும்'' என்றேன்.

பார்சலைப் பிரித்து அருகிலிருந்து சாப்பிடத் தொடங்கினான் தலையிலிருந்து நீர் வழிந்து முகத்தில் கோடு போட்டது. ''தம்பி குளிரயில்லையா? ஈர உடுப் போடேயே இருக்கிறீர்? என்றேன்.'' ''அண்ணை, நீங்க இதைச் சொல்றீங்கள் பொயின்றுகள்ல மழை பெய்யக்குளையும் நாங்கள் நிக்கிறனாங்கள். குளிர் எண்டு விட்டுட்டு வந்தா? கடகடவெனச் சிரித்தான் மூவிங் பங்கருக்குள்ள இடுப்பளவுக்குத் தண்ணியிருக்கும்'' சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தான் வாசலில் நின்றவன் திரும்பி, துண்டொன்றை எடுத்து எறிந்தான். ஒரு கையால், சோற்றைக் கவளமாக்கி வாயில் போட்டவாறு மறு கையால் துடைக்கத்தொடங்கினான்.

மழை குறைந்திருந்தது. ''தம்பி இருட்டுது, இன்னும் ஒரு அஞ்சு நிமிஷம் பார்த்திட்டு போறன்'' என்றேன். சாப்பிட்டபார்சலைசுருட்டிய சின்னவன்,''றைபிளை கிளீன் பண்ணித் தாறியா'' மற்றவனை கெஞ்சலோடு கேட்டான் 'என்ர றைபிளையே எனித்தான் கிளீன் பண்ணப் போறன்,நீஉண்டதைச்செய்' என்றான் மற்றவன் இவன் நெளிப்புக்காட்ட, மற்றவன் கையை ஓங்கினான் இருவரும் ஒருவருக்கொருவர் பகிடி பண்ணிச் சிரித்தார்கள்.

ஷெல் விழும் சத்தமொன்று அருகில் கேட்டது. எழுந்து கேற்றுக்குவந்தேன். கிட்டவா என்றேன். தொடர்ந்தும் ஷெல்கள் விழும் சத்தங்கள். சின்னவனின்முகத்தைப்பார்த்தேன்குறும்புத்தனம்மறைந்து, கைகளில் றைபிளைத்தாங்கியபடி வெளியே வந்தான். ''அண்ணை நீங்க போயிற்று நாளைக்கு வாங்கோ, நான் அண்ணைற்ர சொல்றன்'' என்றான். துப்பாக்கிப் பிரயோகமும் தொடங்கியது. ''நான் வாறன்'' என்றவாறு சைக்கிளைஉருட்டிக்கொண்டு வீதியில் ஏறினேன்.

மீண்டும் துர்க்கை அம்மன் ஆலயம் இருண்டு, சஞ்சாரமற்றுக் கிடந்தது. சில்வண்டுகளின் ஓலம் இடிந்த வீடுகள், யாருமற்ற மயான அமைதியைக் குலைக்கும் வெடியோசைகள்.

வேகமாக பெடலை மிதித்தேன். முன்னே, மண்வெட்டியுடன் கிழவர் ஒருவர் சற்று, சைக்கிளை மெதுவாக்கி, ''ஐயா, வாறியளா?' ' என்றேன். வாயில் மென்றுகொண்டிருந்த புகையிலையை காறித்துப்பிவிட்டு ஏறிக்கொண்டார்.

11 : பூநகரி - நாகதேவன் துறை இராணுவ கடற்படைக் கூட்டுத்தளம் மீது புலிகள் ''ஒபரேஷன் தவளை'' நடவடிக்கை; கூட்டுத்தளம் தகர்த்தெறியப்பட்டது; 5 நீருந்து விசைப்படகுகள்; இரண்டு டாங்கிகள்; கவசவாகனம், '120 எம் எம். பீரங்கிகள்; 50 கலிபர் துப்பாக்கிகள், மற்றும் பல கனரக வாகனங்கள் உட்பட 30 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் மீட்கப்பட்டன. 2500க்கு மேற்பட்ட இராணுவக் கடற்படையினரில் 1000க்கு மேற்பட்டோர் பலியாகினர். நூற்றுகணக்கானோர் காயமடைந்தனர். முகாம் தகர்க்கப்பட்டபின் இருதினங்கள் தப்பி ஓடிய படையினரைத் தேடியழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது சிங்களப் படையினர் பேரிழப்பைச் சந்தித்தனர்: மூன்று நாள் சமரில் இரு கடற்கரும் புலிகள் உட்பட 458 புலிகள் வீரச்சாவு.

12 : யாழ் அரச அதிபர் செயலகம் மீது சுப்பர் சொனிக் தாக்குதல்; அரச அதிபர் உட்பட 22 பேர் காயம்; செயலகம் பாரிய சேதம்

13 : குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது சுப்பர் சொனிக் தாக்குதல்; 9பொது மக்கள் உடல் சிதறிப் பலி; யாழ். போதனா வைத்திய சாலை பகுதிகளில் சுப்பர் சொனிக் தாக்குதல்; சிறுவன் பலி; ஆறுபேர் காயம், நந்தாவிலில் குண்டுவீச்சிற்கு 10 பேர் காயம்

14 : தென்மராட்சியில் சுப்பர் சொனிக் தாக்குதலுக்கு ஏழு பேர் காயம்.

15 : கிளிநொச்சி ஆஸ்பத்திரிமீது சுப்பர்சொனிக் தாக்குதல்; இளம்தாய் பலி; 6 பேர் காயம்; முள்ளியவளை ஆஸ்பத்திரி மீது சுப்பர்சொனிக் குண்டுவீச்சு

16 : மன்னம்பிட்டி கிராமத்தில் 4 தமிழர் படுகொலை.

21 : திருமலை பன்குளத்தில் விமானப் படையினர் மீது தாக்குதல்; இருவர்பலி; ஆயுதங்கள் மீட்பு; மட்டக்களப்பில் புலிகளின் தாக்குதலுக்கு 2 இராணுவத்தினர் பலி

பொன்னாலையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுககு மீனவர் பலி

23 : கிரானில் இராணுவத்தால் இரு பொதுமக்களின் தலை துண்டிப்பு.

26 : கொக்குவிலில் பாடசாலை மீது சுப்பர் சொனிக் தாக்குதல்; ஆசிரியைகள் மாணவிகள் காயம்

சிலாவத்துறை, கொண்டச்சி இராணுவ முகாம்கள் மூடப்பட்டன.

27 : மாவீரர் தினம்; தேசியத் தலைவர் பிரபாகரன் செய்தி; தமிழீழமெங்கும் அஞ்சலி நிகழ்வுகள்

30 : பஸ்வண்ம மீது நீர்வேலியில் ஹெலி தாக்குதல்; 8 பேர் காயம்.

## டிசம்பர்

01 : வன்னிப் பகுதியில் பெருவெள்ளம்; ஒருவர் பலி; பலர் வீடிழப்பு.

02 : மூதூரில் புலிகள் அதிரடி 8 இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு.

03 : விமானத் தாக்குதல்களைக் கண்டித்துயாழ்ப்பாணத்தில் மௌன ஊர்வலம்.

வடக்கு - கிழக்கு பகுதிகளை சூறாவளி தாக்கியது; பெருமழை பலர் வீடிழப்பு.

05 : குருநகர் - பாசையூரில் விமானப்படை தாக்குதல் 25 பொதுமக்கள் பலி; 70க்கு மேற்பட்டோர் காயம்

09 : வடமராட்சி மீது எறிகணைவீச்சு; ஒருபெண் பலி; 4 பேர் படுகாயம்.

10 : கிளிநொச்சியில் விமானக் குண்டு வீச்சு; ஏழு பேர் காயம்.

11 : பூநகரி முகாம் தகர்ப்பு 3 நாள் வெற்றிவிழா ஆரம்பம்.

12 : பூநகரி வெற்றியை ஈட்டித்தந்த தலைவர் பிரபாகரனுக்கு கிரீடமும் கேடயமும்; யாழ் பல்கலைக் கழகத்தில் வெற்றிநாள் கூட்டத்தில் வைத்து வழங்கப்பட்டது.

16 : தேசியத் தலைவர் பிரபாகரன் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளில் வீரசாதனைபுரிந்த17 போராளிளுக்கு பரிசில்கள் வழங்கினார்.

18 : தமிழீழ பகுதி எங்கும் வெள்ளப்பெருக்கு; 3,75,000 பேர் வீடிழப்பு.

21 : சதிரவெளியில் புலிகள் அதிரடி; 4 இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

27 : அலம்பிலில் விமானத் தாக்குதல் சிறுவர்கள் உட்பட மூவர் பலி.

---

# சிறிலங்கா

ஜன. 10 : சமஷ்டித் தீர்வுக்கு எதிராகப் பௌத்த அமைப்புக்களின் ஒன்றியத்தின் பிரசாரக் கூட்டங்கள்

ஜன. 20 : கொழும்பு மாவட்ட ஐ தே க பாராளுமன்ற உறுப்பினர் ஹட்சன் சமரசிங்காவைக் குண்டுவீசிக் கொல்ல முயற்சி

மார்ச் 27 : குவேர்க்கஸ் சமாதான குழு கொழும்பில் பேச்சு

மார்ச் 28 : பூசா தடை முகாமில் தமிழ் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பம்

ஏப்பி. 04 : பூசா உண்ணா விரதம் முடிவு

ஏப்பி. 23 : முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமாகிய லலித் அத்துலத் முதலி கொழும்பில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது இனம் தெரியாத இளைஞரால் சுட்டுக் கொலை

பல்கலைக்கழக மாணவர் கொழும்பில் நடாத்திய ஊர்வலம் மீது பொலிசார் தடியடி: 50 பேர் காயம்

ஏப்பி 26 : லலித் கொலை பற்றி விசாரிக்க ஸ்கொட்லண்ட்யார்ட் கொழும்பு வருகை

லலித்திற்கு அஞ்சலி செலுத்தச் சென்ற அரசாங்க உறுப்பினர் மீது லலித் ஆதரவாளர் பாய்ச்சல்

ஏப்பி 28 ; லலித் தகனம்

ஏப்பி 29 : கொழும்பு ஈ பி டி பி குழு அலுவலகம் மூடப்பட்டது

மே 01 : சிறிலங்காவின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆர் பிரேமதாசா, மேதின ஊர்வலத்தில் சென்று கொண்டிருந்தபோது தற்கொலைப் படைவீரரின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிப் பலி

மே 07 : சிறிலங்காவின் ஜனாதிபதியாக டி பி விஜேதுங்க பாராளுமன்றத்தில் தெரிவு; பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமனம்; 22 அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம்

மே 10 : பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக வைஸ்மார்சல் வால்டர் பர்ணாண்டோ நியமனம்

மே 17 : அவசரகாலச் சட்டம் மீண்டும் பிரகடனம்

வடக்கு கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மாகாண சபை தேர்தல்; 3 மாகாண சபைகள் எதிரணி வசம்

மே 20 : பிரேமதாசவினால் நியமிக்கப்பட்டிருந்தஇராசிய விசாரணைக்குழு கலைப்பு; அராலித்துறையில் கண்ணிவெடிக்குப் பலியான லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணம்பற்றி விசாரிக்க கொமன்வெல்த் நீதிபதிகள் மூவர் நியமனம்; அநுராதபுரம் மீரிகமவில் இராணுவம் பொதுமக்கள் மோதல்; ஒருவர் பலி; 15 பேர் காயம்.

மே 22 : பிரேமாவின் மெய்ப் பாதுகாப்புக் குழு கலைப்பு

மே 23 : ஜெனரல் சேபால ஆட்டிக்கல பாதுகாப்பு ஆலோசகராக நியமனம்

மே 26 : டென்சில் கொப்பேகடுவ மரண விசாரணை ஆரம்பம்

ஜூலை 09 : முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம் பொல, ஐ. தே. க. அரசுமீது கூறியிருந்த குற்றச்சாட்டுகள் வாபஸ்

ஜூலை 21 : சிறிலங்கா அரசின் அடக்கு முறைக்கு எதிராக கொழும்பில் அரச ஊழியர் மறியல்

ஜூலை 28 : வெலிக்கடையில் தமிழ்கைதிகள் உண்ணாவிரதம்

ஆகஸ்ட் 02 : பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் குண்டு வெடிப்பு; 6 தமிழர் பலி; 35 பேர் படுகாயம்

ஆகஸ்ட் 03 : சிறிலங்காவின் அரசியலமைப்பைத் திருத்தி அமைப்பது குறித்து ஆராய தெரிவுக்குழு நியமிக்க பாராளுமன்றம் அங்கீகாரம்

ஆகஸ்ட்08:இனப்பிரச்சினை ஐ. நா. மத்தியஸ்தம்; சிறிலங்கா நிராகரிப்பு

செப் 06 : கூட்டுப் படைத் தலைமை அலுலகம் கலைப்பு; பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பு; பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகவும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நியமனம்; ஏயர் வைஸ் மார்சல் வோல்டர் பர்னாண்டோ ராஜினாமா

செப் 10 : கொழும்பு துறைமுகத்திற்குப் பிரான்ஸ் போர்க்கப்பல்

செப் 15 : கடற்படை உயர் பீடத்திற்கு புதியவர்கள் நியமனம்; இராணுவத்தில் பிரிகேடியர்களாக 11 பேருக்கு பதவி உயர்வு

நவம் 05 : பலகலைக்கழக அனுமதி முறை ஆராய 8 பேர் கொண்ட குழு நியமனம்

நவம் 10 : வரவு செலவுத் திட்டம்

நவம் 11 : ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக அனுரா பதவி ஏற்பு

நவம் 19 : பூநகரித் தளம் வீழ்ச்சியை விசாரிக்க இராணுவ விசாரணைக் குழு

நவம் 22 : கிளிநொச்சி யாழ்ப்பாணம் இணைப்பதிகாரியாக பிரிகேடியர் அசோக ஜெயவர்த்தன பதவி ஏற்பு

நவம் 27 : வடக்கு நடவடிக்கை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா நியமனம்

நவம் 30 : வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராக லயனல் பர்னாண்டோ

டிசெ 04 : இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா பதவி விலகல் சமர்ப்பிப்பு

டிசெ 17 : உயர்கல்வி அமைச்சராக அனுரா பதவி ஏற்பு

டிசெ 20 : மத்திய மாகாண சபையின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டத்தல் தொண்டமான் செல்லச்சாமி முரண்பாடு

டிசெ 21 : மத்திய மாகாண முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவை முதல்வரால் நிராகரிப்பு

டிசெ 31 : இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா பதவி விலகல்.

---

# 1993 - போராண்டும் தமிழீழமும்

பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு ஆகிய முக்கிய சமர்களில் யாவற்றிலும் மகளிர் படையணி திறம்படச் செயற்பட்டது கனரக ஆயுதங்கள் சகிதம்போரிடும்வல்மையைப் பெற்றுவிட்ட இவ் மகளிர் படையணியினர் பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பில் தரையிலும், கடலிலும் போரிட்டு உலகிற்குதமதுவலிமையை வெளிக்காட்டியிருந்தது.

இவ்வாறாக முடிவுற்ற போராண்டு தமிழீழத்தை ஒரு புதிய நிலைககு எடுத்துச் சென்றுளளது. மன்னாரின் பெரும் பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் சுமார் 1550 படையினரை சிறிலங்கா இராணுவம் இழந்தது மட்டுமன்றி 2000இற்கு மேற்படடோர் காயப்பட்டுமுள்ளனர். புலிகளின் படையணிகளோ டாங்கிகள், கனரக கவசவாகனங்கள், நீண்ட தூர பீரங்கிகள், அதிவேகப்படகுகள்கொண்ட வலிமையுள்ள படைப்பிரிவுகளாக வளர்ச்சி அடைந்துள்ளன.

பல வெற்றிகளைப் பெற்றுத் தந்து 1993 போராண்டு விடைபெறுகிறது 1994 போராண்டில் புதிய வெற்றிகளைப் பெற்று தமிழீழத்தை நோக்கி நகர்வோமாக.


உலக உலா

டிசம்பர் மாதம் "உலகை உலா" வந்துவிட்டீர்களா?

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் டிசம்பர் மாத உலக உலாவை வாங்கிப் படிக்க வேண்டியது தான்!

உலகினை வலம் வந்த உணர்வினைப் பெறுவீர்கள்!!

- ★ நியூஸ்வீக், ஏசியாவீக், ரைம், றீடேர்ஸ் டைஜஸ்ட், பொப்பியுலர்சயன்ஸ் போன்ற அனைத்துலக ஆங்கிலச் சஞ்சிகைகளின் அரிய கட்டுரைகள்!
- ★ உலகின் பல்துறைசார் செய்திகள்!!
- ★ தமிழீழ ஏடுகள் எவற்றிலுமே வெளிவராத அருமையான விடயங்கள்!!!



அறிவினை வளர்க்கும் அருமையான செய்திகள், ஆய்வுக் கட்டுரைகளை அழகு தமிழிலே மாதாந்தம் தருவது

**உலக உலா**

- உலக விவகாரங்கள்
- மனிதவியல் வரலாறு
- மருத்துவ சாதனைகள்
- திரைப்படம்
- வாணிகம்
- புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்
- பொது அறிவுப்புதையல்
- நோபல் பரிசு சாதனைகள்
- செய்திச்சரங்கள்
- விண்வெளி அறிவியல்
- தொழில் நுட்பவியப்புகள்

இன்னும் பல அற்புதங்கள் ! ஆச்சரிய வியப்புக்கள்!

பொது அறிவுக்களஞ்சியமாக பைந்தமிழிலே மலர்கிறது

**உலக உலா**

1993 ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற சாதனையாளர்களைப் பற்றியும் அவர்களது கண்டுபிடிப்புகளையும் தாங்கி இம் மாத உலக உலா வெளிவந்துள்ளது.

உலக உலாவை நீங்கள் தேடித் திரிகிறீர்களா? கவலையை விடுங்கள்!

உலக உலா வாசகர்களுக்கு ஓர் நற்செய்தி!!

## யாழ் மாநகரிலே உலக உலா செயலகம் திறந்துள்ளோம்

உங்கள் பிரதிக்கு இங்கே செல்லுங்கள்

# உலக உலா செயலகம்

144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

(இராசன் அச்சக 3-ம் மாடி)

**வடமராட்சி மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி**

உலக உலாவைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

உதயன் புத்தகசாலை,
புதிய சந்தை, பருத்தித்துறை

**தென்மராட்சி மக்களுக்கோர் மங்களகரமான அறிவிப்பு**

உலக உலாவை தாமதமின்றி நீங்கள் பெற வேண்டிய நிறுவனம்

சோதி புத்தக நிலையம்
கச்சாய் வீதி, சாவகச்சேரி

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துப் புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-8245)

## இன்றைய

தியேக கல்வி நிலையங்களில் கற்பிக்கின்றார்கள். ஒருசிலர் வினாவிற்கான புள்ளிவிபரத் திட்டத்தினைக் கொண்டு வினாவிடை என்பதை அச்சடித்து விற்று வருகின்றனர் பாடசாலைக் கல்வியைவளம் படுத்த வேண்டியவர்களே இவ்வாறு தொழிற்பட்டால் பாடசாலைக் கல்வியை நெறிப்படுத்த வேண்டியவர்கள் யார்?

இதுவரை காலமும் வெளிவரும் பொதுப் பரீட்சை முடிவுகள் மேல் எழுந்தவாரியாக ஒரு சில சிறந்த பெறுபேறுகளைக் கொண்டுள்ளதோர் பாடசாலைகளின் தரத்தை நிர்ணயிக்கும் முறை இருந்து வருகின்றது அதிலும் ஒரு சில பாடசாலைகள் மாணவர்களை பலவாறாக வடிகட்டித்தான் எடுப்பதும் பலருக்கும தெரிந்திருக்கும். அப்படியான சந்தர்ப்பங்களிலும் அப்பாடசாலைகளின் அனேக மாணவர்களின்பெறுபேறுகள் மிகவும் தரக்குறைவாக இருக்கும் இரகசியம மூடி மறைக்கப்படும் பணியில் கல்வித் திணைக்களம் செயல்பட்டு வந்துளளது. பெறுபேறுகளை பாட ரீதியாக புளளிவிபரவியல் அடிப படையில் உண்மையை வெளியிடுவார்களேயானால் நகரப் பாடசாலை மீதான மோகம் கிராமப்புற பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படாது. இப்படிபுள்ளி விபரமாகவெளியிடுவதன்மூலம்தாமே சிறந்த ஆசிரியர்கள எனக் கூறிக் கொண்டிருக்கும்பிரத்தியேகக் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் திறமையின்மையை வெளிக் காட்டியிருக்க முடியும். கிராமப்புற பாடசாலைகளை வளர்த்து எடுத்திருக்க முடியும்.

இன்று திட்டமிட்டு சிறிலங்கா அரசு எமது கல்வியில் பல தடைகளை ஏற்படுத்தி வரும்போது அதற்கு ஏற்ற வகையில் கல்வித் திணைக்களத்தின் நடவடிக்கைகளும் அமைந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது. இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் எமது விடுதலைப்போராட்டத்தினால் நடைபெறும் பாடசாலைநாட்கள்குறைவு, நாளாந்த பாடசாலை நேரமும் குறைவாய் உள்ளது. பிரத்தியேகக் கல்வி நிறுவனங்களில் மாலை 6-30 மணிவரை கற்பிக்கப்படும் போது பாடசாலைகள் ஏன் 3.30 மணி வரை கற்பிக்க கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை. இவர்களும் தாமும் வேறு பணிகளுக்குச் செல்லலாம் என்ற பொறுப்புணர்ச்சியற்ற தன்மையே காரணமாகும்.

''ஆள்காட்டி''


## மதுரா பட்டு மகால்

- ஆதரவாளர்களின்ஆவல்அறிந்தசேவை!
- மங்கள வைபவங்களுக்கான பட்டுப் புடவைகள்!!
- இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத் திணிசுகள்!!!

மதுராவின் வாடிக்கையாளர் 'பரிசுத்திட்டம்'

1-ம் பரிசு தங்கப் பதக்கம்
2-ம் பரிசு ரூபா 5000/-
3-ம் பரிசு ரூபா 2500/-
பல ஆறுதல் பரிசில்கள்

மதுரா ஆதரவாளர்களின் சிட்டை இலக்கங்கள் அனைத்தும் பரிசுத்திட்டக் குலுக்கலில் 1994 சித்திரையில் சேர்த்துக்கொள்ளப்பட விருப்பதால் சிட்டைகளைப் பத்திரப்படுத்துங்கள்.

நன்றி.

75, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-8244)



## அறிவித்தல்

### சர்வதேச லயன்ஸ்கழகம்

மாவட்டம் 306B பிராந்தியம்6

We Serve

REGION 6 LIONS-CANCER FUND

புற்று நோயாளரின் நலம் கருதி நடக்கும் அதிர்ஷ்டலாப சீட்டு விற்பனையும் குலுக்கலும் 15-03-1994ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது என அறியத் தருகின்றேன்.

(7081) பிராந்தியத் தலைவர்.



அனைத்துலகப்பெண்கள்நாளைமுன்னிட்டு
விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும்

## இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப் போட்டிகளை நடாத்த விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்தவகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:-

- படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.
- கவிதைகள் 35 வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் 4 பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்க வேண்டும். ஓவியங்கள் போட்டியாளர்கள் விரும்பும் அளவில் வரையப்படலாம்.
- போட்டியாளரின் சொந்தப்பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
- கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், ''அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கியம், ஓவியப் போட்டிக்கான படைப்புக்கள்'' எனக் குறிப்பிடப்பட வேண்டும்
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- போட்டி முடிவுத் திகதி — 1994-01-20.
- படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;

**சுதந்திரப் பறவைகள்,
வெளியீட்டுப் பிரிவு,
விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு,
கோண்டாவில்.**

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் இவ் இலக்கிய, ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக் கொள்கின்றது.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு

(சி-8080)


# 3 ஆம் ஆண்டு நினைவாக



## கப்டன் றோய்

(சிற்றம்பலம் மகேந்திரராசா)
மயிலிட்டி

முத்தாக: 16. 05. 66
வித்தாக: 31. 12, 90

மயிலை மண் பெற்ற மகன்
மானம் மிகு வீர மகன்
தமிழர் தம் துயர் தீர்க்க
தலைவன் வழி சென்ற மகன்.

முடிகள் சரிந்திடவே - வானில்
இடிகள் ஆயிரம் முழங்கிடவே
மறவர் குடிகள் நடாத்திய
போர் மூனை புகுந்தாய்.

அன்னை அவள் தன் பிள்ளை என்றிருந்தாள்
தமிழன்னை தன் பிள்ளை என்றணைத்தாள்
தம்பி என நாமிருக்க - தானைத் தலைவனவன்
தன் தம்பி என்றணைத்தான்.

சிரித்த செழித்த உன் சிங்காரமும் தன்னை
எரித்து கெடுத்திட கூடாதென
புதைந்து தமிழுக்கு வித்தானாய்.

மூன்றாண்டு சென்றாலும்
முத்தமிழின் இசைபோல
முக்கனியின் சுவைபோல
முடியாது உன் நினைவு.

மயிலை மண்ணில் முத்தாகி
புலிகள் பாசறை சொத்தாகி
தமிழ் மண்ணில் வித்தாகி
விடிகின்ற தமிழீழ
விடிவெள்ளி றோய் ஆனாய்.

இன்று 31. 12. 93 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
நெல்லியடி

(7067)

# 1993 - போராண்டும் தமிழீழமும்

புதியவன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களால் காவல் அரண்களையும் ரோந்து அணிகளையும் இழந்து ஆடிப்போன நிலையில் சென்ற போராண்டினை சிறிலங்கா இராணுவம் நிறைவு செய்தது. இவ்ஈடாட்ட நிலையில் பெருமளவு ஆயுதப் படையினர் தப்பியோடியிருந்தனர். சுமார் 1500படையினர் கொல்லப்பட்டும் மேலும் 2000 படையினர் காயமுற்றும் இருந்தனர். அதுமட்டுமன்றிக் கடந்த போராண்டுவிடுதலைப் புலிகளுக்கு சுமார் 1300 ஆயுதங்களை சிறிலங்கா ஆயுதப்படைகளிடமிருந்து பெற்றுக் கொடுத்திருந்தது இவ்வாறானதொரு பெரும் இக்கட்டான சூழலில் தான் 1993 என்ற புதிய போராண்டு மலர்ந்தது. 1992 போராண்டினை விட இவ்வாண்டு ஒரு வித்தியாசமான போர்நிலையை தமிழீழத்தில்ஏற்படுத்தியிருந்தது. போரின் பரிமாணங்கள் பெரிதும் பரிணாம வளர்ச்சியை எட்டியிருந்தது- குறிப்பிடும்படியாக போரின் அரசியல் சூழல், வல்லரசான இந்தியாவின் அடாவடித்தனம் தாக்குதல்கள், படையெடுப்பு யாழ்ப்பாணம் மீதான இறுதித் தாக்குதல் அச்சுறுத்தல் என்பன தமிழீழம் 1993 போராண்டில் எதிர்கொண்டு தனது வெற்றியை நிலைநாட்டிக்கொண்டது.

இப்போராண்டின் முதல் மாதமான ஜனவரியில் இந்தியாவின் அடாவடித்தனமான சதிஒன்றைத் தமிழீழம் எதிர்கொண்டது. விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளான லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் திலீபன், லெப். கேணல் ஜொனி ஆகியோரை சதிவலையிட்டுச் சாவுகொண்ட இந்தியாவும் அதன் ஆதிக்க வாதிகளும் இன்னொருமூத்த தளபதியான கேணல் கிட்டு அவர்கள் வந்த கப்பலை சர்வதேச கடற்பரப்பில் வழிமறித்து சதி வலை பின்னியது, இதன்ஆபத்தான விளைவாக கேணல் கிட்டு உட்பட 10புலிவீரர்கள் வீரச்சாவு அடைய நேரிட்டது. இப்புலி வீரர்களின் இழப்பானது தமிழீழத்திற்குஈடுசெய்ய முடியாததாக அமைந்தது.

இதேசமயம் 1993 போராண்டு சமாதான முன்முயற்சிகளை எதிர்கொள்ளவில்லை என்றே கூறிவிட முடியும். மேநாள் குண்டுவெடிப்பிலே ஜனாதிபதி பிரேமதாஸ கொல்லப்படு முன்னர் ஆங்கிலிக்கன் ஆயரும் வேறுபல அரச சார்பற்ற சமாதான குழுக்களும் தமிழீழம்வந்து போயினர் இங்குவந்துசென்ற சமாதானக் குழுக்களுக்கு கொழும்பு வரவேற்பளிக்கவில்லை. அதுமட்டுமன்றி அவர்களது முயற்சிகளை உதாசீனம்செய்ததுமல்லாமல் அவர்களைப்புலிகளின் ஆதரவாளர்களாகச் சித்திரிக்கவும் முற்பட்டது. இதே சமயம் தென்னிலங்கைஅரசியல்வாதிகளான தொண்டமான், மங்களமுனசிங்க M.H முகமட் போன்றவர்களும் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு தமிழீழம் வரப்போவதாக அடிக்கடி அறிக்கைவிட்டுக் கொண்டிருந்தனர் எனினும் இவர்களது வரவு குதிரைக் கொம்பாகவே இருக்கிறது.

இரண்டாம் ஈழப்போரின் பின்னர் 1991ஆம் ஆண்டு முதல் சிறிலங்கா ஆயுதப் படைகள் யாழ்ப்பாணம் மீது மிகப்பெரியதொரு தாக்குதலை நடத்தப் போவதாக அடிக்கடி 'அச்சுறுத்தி வந்துள்ளன. தமிழ் மக்கள் மீது ஓர் ''உளவியல் போர்'' யுத்தியாகவும் யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் பயன்படுத்தப்பட்டு வந்தது- அவ்வப்போது சிறிலங்காப் 'படைகள் எதிர் நோக்கிய பின்னடைவுகளால் இது 'ஒத்திவைக்கப்பட்டு வருகிறது- 1992 ஆகஸ்ட் 10-ம் நாள் ''ஒபரேசன் பைனல் கௌன்ட் டவுன்'' என்ற பெயரில் நடத்தப்பட இருந்த யாழ்ப்பாணம் மீதான தாக்குதல், அதற்கு இரு தினங்கள் முன்னதாக தாக்குதலுக்கு திட்டமிட்டுத் தலைமை தாங்கும் தளபதிகள் அராலிதுறைக் கண்ணி வெடி தாக்குதலால் கொல்லப்பட்டதையடுத்து கைவிடப்பட்டது. இவ்வாண்டின் ஆரம்பம் முதல் மீண்டும் இறுதித் தாக்குதல் பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டது.

1993இல் போராண்டில் அல்லது 1994 ஆரம்பத்தில் நடத்தப்பட இருப்பதாக அச்சுறுத்தப்பட்டு வந்த யாழ்ப்பாணச் சமர் மீண்டுமொரு தடவை ஒத்திவைக்கப்பட வேண்டிய நிலையை அடைந்துள்ளது இராணுவம் மற்றும் கடற்படையின் முதுகெலும்பை புலிகள் பூநகரி- நாகதேவன்துறை கூட்டுத்தள தாக்குதலின் மூலம் முறித்து விட்டுள்ளனர். இதனால் பெருமளவு இராணுவத்தினர் பற்றாக் குறையாக உள்ளனர். 90ஆயிரமாக இருந்த இராணுவத்தினரின் தொகை இவ்வாண்டில் ஒரு லட்சமாக்கப்பட்டது புதிதாக 10 பற்றாலியன்கள் உருவாக்கப்பட்டன. எனினும் பெருமளவு உயிர், உடல்சேதம் யாழ்ப்பாணச் சமரை பிள்ளையாரின் திருமணம்போன்று ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது.

1993 போராண்டிலே சிறிலங்கா படைத்துறை மிகப் பெரிய படையெடுப்பு என ஒரு சில நடவடிக்கைகளையே எடுத்தது. படையெடுப்புகளுக்கு பெயர் போன தளபதிகளான லெப். ஜெனரல் கொப்பேக்கடுவ மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணவும் கொல்லப்பட்ட பின்னர் சிறிலங்காப் 'படைத்துறையால் படையெடுப்புக்களை நடத்துவது கடினமாகியது தன்னாலும் படையெடுப்பு நடத்த முடியும் என்று சொல்வதற்காகமட்டும் இராணுவத் தளபதிசிசில் வைத்தியரத்ன ஒரு சிலவரையறைக்குட்பட்ட இராணுவநடவடிக்கைகளை நடத்தினார் மூன் லைற் (நிலா ஒளி), கறுப்புநரி - 4, ரணகீர்த்தி, ரணவிம, சக்பலய, சுழிசுழங், சுமண, முகுது சுழங், யாழ்தேவி, செம்பெயின் போன்ற குறியீட்டுப் பெயர்களில் இராணுவ நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. தமிழீழத்தின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்ட இப்படையெடுப்புக்களிலே யாழ்தேவி நடவடிக்கை தவிர மற்றெல்லாம் ஒப்பீட்டளவில் சிறியதாயிருந்ததைக்காணமுடிந்தது.

சிறிலங்கா படைத்துறைத் தலைமை தனது முழு வளங்களையும் திரட்டி யாழ் குடாநாட்டிற்கான ஒரே வழங்கல் பாதையான கிளாலியை கைப்பற்ற யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. ஆனையிறவு, பூநகரி,கொம்படி—ஊரியான் பாதைகளையும் மூடிவிட்ட நிலையில் கிளாலிப் பாதையையும் கையகப்படுத்தி யாழ் குடாநாட்டையே தனது இராணுவ வேலியால்அடைத்துவிடத் தீர்மானித்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சுமார் பத்தாயிரம் வரையிலான படையினர் பங்கு கொண்ட இம் முன்னேற்ற முயற்சியின் இரண்டாவது நாளில் ''புலோப்பளை வரலாற்றுச் சமர்'' இடம் பெற்றது. இவ் வரலாற்றுச்சமர் நடந்துகொண்டிருந்தபோது படையினருக்கு உதவியாக தாக்குதலில் ஈடுபட்டிருந்த வான்படை விமானங்கள், தாங்கிகளை கைவிட்டு ஓடும் படையினரையும் செத்து விழும் இராணுவத்தினரையுமே காணமுடிந்தது இச் சமரில் சுமார் 150 படையினர் கொல்லப்பட்டும் 250 இற்கும் அதிகமானோர் காயமுற்றதுமல்லாமல் 5இற்கு மேலான கனரக வாகனங்களையும் இழக்க நேரிட்டது. யாழ்தேவி தொடர்ந்து காங்கேசன்துறை வரை செல்வதற்கு பதிலாக கிளாலியுடன் தனது பயணத்தை முடிக்க நேரிட்டது. இச்சமர் சிறிலங்காப் படைகள் எதிர்கொண்ட பல கடுமையான தாக்குதல்களில் ஒன்றாகியது. இராணுவத் தலைமையகப் பதிவேட்டில் கறைபடிந்துபோன பக்கங்களால் பதியப்பட்டது.

அடுத்ததாக இந்தப் போராண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சமர்களை எடுத்து நோக்குவோம். 1992 ஆரம்பத்தில் தமிழினத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வகுத்த புதிய போர்முறைத் திட்டம் பரிணாமரீதியாக வளர்ச்சி அடைந்தது. சிறப்பான வேவின் பின்னர் படையினர் எதிர்பாராத ரீதியில் எதிர்பாராத நேரத்தில் திடீரென மின்வேகத்தில் அதிரடித் தாக்குதல் நடத்திப் படையினரை அழித்து ஆயுதங்களை மீட்பதே இப்போர் முறைத் திட்டமாகும். ஆரம்பத்தில் சிறிய ரோந்து அணிகளும் தனிப்படுத்தப்பட்டகாவல்நிலைகளும் இத்தாக்குதலால்சிரழிக்கப்பட்டன. இது படிப்படியாக 100 பேர் வரையிலான ரோந்துஅணிகளும் சிறிய இராணுவ முகாம்களுமாகவும் பின்னர் பல தொடர் காவலரண்களைக் கொண்ட இராணுவ வேலிகளை அழிப்பதுவரை வளர்ந்த நிலையில் 1992 போராண்டு கழிந்து போனது. படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடைந்த இப்போர்த் தந்திரோபாயம் இப் போராண்டிலே ஒரு பிரமாண்டமான இராணுவ-கடற்படைக் கூட்டுத் தளத்தை (MILITARY COMPLEX) அழிக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

வழமை போலவே இவ்வாண்டிலும் முகாம்களுக்கிடையே ரோந்து செல்லும் இராணுவ அணிகள் தாக்கி அழிக்கப்பட்டன. அத்துடன் தமிழீழ எல்லைப்புறத்திலிருந்த தம்மின்ன, செட்டிகுளம், ஜெயந்தியா, இலவங்குளம், ஊறல்பிட்டியளை, கட்டுவன் வில், மினி முகாம்களும் மற்றும் பம்புருஸ்கவெவ, மணலாற்று மினி முகாம், இலுப்பைச்சோலை காவல் நிலையம் என்பனவும் புலிகளால்தாக்கிஅழிக்கப்பட்டன. சில நிமிடச் சமர்களில் இப்பாசறைகளிலிருந்த படையினர் அழிக்கப்பட்டு விரட்டப்பட்டு ஆயுத தளபாடங்கள் மீட்கப்பட்டன.

இவற்றுடன் இராணுவ மற்றும் ஆயுதப் படைகளுக்கு தலையிடி தரும் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. அதாவது இராணுவ ஆக்கிரமிப்பில்இருக்கும் தமது பூரண கட்டுப்பாட்டிலிருப்பதாகக் கூறப்படும் பிரதேசங்களில் நுழைந்து புலிகள் தாக்குதல் நடத்தியமை ஆகும். இவ்வகைத் தாக்குதல்களில் வவுனியா ஆசிக்குளத்திலும் மன்னாரில் தீவிலும் பெரும் நிலப்பரப்பிலுமாக பதினொரு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. படையின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட இத் தாக்குதல்களால் பெருமளவு உயிர், தளபாட இழப்புக்களை ஆயுதப் படைகள் எதிர் கொண்டன. எங்கிருந்தோவந்து தாக்கிவிட்டு எங்கோ தப்பிப்போய் விடுகிறார்கள் என்று ஆயுதப் படைத் தலைமையின் தலையை உடைக்கும் வகையில் இத்தாக்குதல்கள்அமைந்தன.

கிளாலிக் கடல் நீரேரி இப்போராண்டிலே நூற்றுக்கணக்கான தமிழர்களின் குருதியால் சிவந்தது. மக்களைத் தாக்க வரும் கடற்படைக்கும் கடற் புலிகளுக்குமிடையிலான போர் பற்றிய செய்தி வழமையானது. இந்நிலையில் ஆகஸ்ட் 26-ம் நாள் மக்களைத் தாக்க வந்த சிங்களக் கடற்படை சிதறிமாண்டது. கடற்கரும் புலிகளான கப்டன் மதன், மேஜர் வரதன் என்போர் கடற்படையின் இரு நீரூந்து விசைப்படகுகளை அழித்துச் சாதனை படைத்தனர். இது நடந்து நான்கு நாட்கள் கழிந்த நிலையில் பருத்தித்துறைக் கடலில் ரோந்து சென்ற கடற்படையின் 'சுப்பர் டோறா' கரும்புலித் தாக்குதலுக்குட்பட்டது. அத்துடன் இப்படகிலிருந்த 20 மி.மீ. பீரங்கிகள் இரண்டு கைப்பற்றப்பட்டன. இவ்விரு தாக்குதல்களும் கடற்புலிகளின் கனரக ஆயுதப் பிரிவை 50 கலிபர்கள் நான்காலும் 20mm பீரங்கிகள் இரண்டாலும் அதிகரிக்கச் செய்தது மட்டுமன்றி வடபகுதிக் கடற்பரப்பில் கடற்படையின் மேலாதிக்கத்தில் முறிவு ஏற்பட்டது. இவ்விரு தாக்குதல்களிலும் 25 கடற்படையினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல்களால் சுமார் 40கோடி ரூபா பெறுமானமுள்ள கடற்படைத் தளபாடங்களை இழந்து விட்டமை சிறிலங்கா கடற்படை முன்னர் எப்போதுமே சந்திக்காத பேரிழப்பாகும்.

1983 யூலை 23ஆம் திகதி திருநெல்வேலித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு இருதினங்களின் பின்னர் 25-ம்திகதிதமிழருக் கெதிராக பெரும் இனக்கலகம் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டது, இந்நாளின் பத்தாவது ஆண்டை பூர்த்தி செய்யும் நாளான 1993 யூலை 25ஆம் நாள் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தலாம் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவு சகல படை முகாம்களுக்கும் எச்சரிக்கை விடுத்திருந்தது. ஆனால் அன்று அதிகாலையில் மணலாற்றிலுள்ள மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது 'இதயபூமி I' தாக்குதல் பிரிவுகள் பாய்ந்தன, 30 நிமிட நேரச்சமரில் மிகப்பெரிய இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ந்தது. காவலரண்களை கைப்பற்றிய புலிகள் இன்று பலமான பாதுகாப்பான முகாமையும் தகர்ப்பார்கள் என்று சிறிலங்கா அரசுக்கும் படையினருக்கும் உணர்த்தப்பட்டது. குறியீட்டுப் பெயரிட்டு நடத்தப்பட்ட இரண்டாவது இராணுவ நடவடிக்கையான இதயபூமி I புலிகளுக்கு சுமார் 5 கோடி ரூபாவிற்கு மேலான பெறுமதியுடைய ஆயுதங்களை அள்ளித்தந்தது மண்கிண்டிமலைத் தோல்வியால் இராணுவத் தலைமைப்பீடம் பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டது. கூடவே அதிகாரிகளுக்கிடையில் பூசலும் வளர்ந்தது. தமிழரின் தாயக பூமியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவும் பேரினவாதிகளின் முயற்சியில் மண் அள்ளிப் போடப்பட்டது. இராணுவ விசாரணைக்குழுவை நியமித்த விஜேதுங்க படையினரை 'பகலில் தூங்கி இரவில்விழித்திருக்குமாறு' தனது ஆலோசனையை வேறு 'வழங்கும் அளவிற்கு இத்தோல்வி இருந்தது.

புலிகள் நடத்திய அடுத்த தாக்குதல் சமர் உலகையே ஐந்து நாட்கள் தமிழீழத்தின் பக்கம் திருப்பியது. விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் சரி உலகில் வேறெந்த விடுதலைப் போராட்டத்திலும் சரி இடம் பெற்றிராத ஒப்பற்ற வரலாற்றுச் சமர். புலிகள் நடத்திய சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமராக அமைந்தது. இந்தச் சமர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை பெற்றுத் தராத பல வெற்றிகளை எமக்கு ஈட்டித் தந்தது ஆரம்பத்தில் அதாவது 15 வருடங்களுக்கு முன்னர் ஒரு சில துப்பாக்கிகளைக் கொண்டு போராடிய கரந்தடி அமைப்பு இன்று நவீன படைப் பிரிவுகளாக கவசப் படைப் பிரிவுகளையும் பீரங்கிப் படைப் பிரிவுகளையும் கடற்படைப் பிரிவுகளை கொண்டதாக மாற்றியமைத்த சமர் இது.

ஆரம்பத்தில் ஒரு முகாமை தாக்கி அழித்த புலிகள்இன்று ஐந்து இராணுவ முகாம்களையும் ஒரு கடற்படைத் தளத்தையும் கொண்ட கூட்டுத் தளத்தை அழிக்கும் வல்லமையுள்ளவர்களாக மாறியிருக்கிறார்கள். இச்சமர் சிறிலங்கா படையக் கட்டமைப்பில் நேரடி மற்றும் மறைமுக எதிர்வுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது. சுமார் ஆயிரம் படையினரை இழந்தும் 650 படையினர் காயப்பட்டும் உள்ளனர். இது இவர்களுக்கு நேரடித் தாக்கமாக அமைந்தது. மறைமுகத் தாக்கம் இராணுவத் தளபதியைப் பதவி விலகச் செய்துள்ளதோடு மேலும்பல உயரதிகாரிகளை விசாரணைக்குட்படுத்தும் நிலையாக அமைந்துள்ளது.

இச்சமரின் பின்னர் தமிழீழத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ''புலிகள் தமிழீழத்தைப் பெற தகுதி உடையவர்கள்'' என்று கூறியுள்ளார். இவர் மட்டுமன்றிப் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா ''பிரபாகரன் தனது படையணியுடன் நாளை கொழும்பு வந்தாலும் ஆச்சரியமல்ல'' என்று தமது படைகளின் ஆற்றாமையையும் புலிகளின் ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளார்

இப்போராண்டின் முடிவில் கடற்புலிகள் விடுதலைப்போரின் முக்கிய ஒரு சக்தியாக வளர்ச்சி பெற்றிருந்தனர். வடதமிழீழக் கரையோரப் பகுதிகளில் சிறிலங்கா கடற்படையின் சுதந்திரமான நடமாட்டம்கட்டுப்படுத்தப்படும் நிலை ஒன்றை எய்தியதோடு வடக்கிலுள்ள கடற்படைத் தளங்களின் பாதுகாப்புக் குறித்தும் பெரும்கேள்வியைக் கடற்புலிகள் ஏற்படுத்தினர். இவற்றில்கடற்கரும்புலிகளின் சாதனை மகத்தானது. இப்போராண்டில் நான்கு கரும்புலித்தாக்குதல்கள்நடாத்தப்பட்டன ஆறுகரும்புலிகள்இதில் பங்குகொண்டனர். இவற்றின் ஒட்டுமொத்தச்சாதனையாக யாழ் கடல் நீரேரி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது. இம்மகத்தான சாதனை தமிழீழ விடுதலைப் போரில் புதிய பரிணாமம் ஒன்றையே தோற்றுவித்தது.

இவ்வாண்டுப் போர்முனைகளில் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியும் மகத்தான சாதனைகளைப் புரிந்திருந்தது, இவ்வாண்டின் பெரும் சமர்கள் என நினைவு கூரப்படும் மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு, புலோப்பளைச்சமர்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் உறவு:
18-04-1927

விண்ணில் உறவு:
01-12-1993

### திரு. சங்கரப்பிள்ளை பீதாம்பரம்

(இளைப்பாறிய உபஅதிபர் யா - நல்லூர் ஸ்தான சி-சி-த க-பாடசாலை)

சென்ற இடம் திரும்பும்வரை வாசலிலே காத்
திருப்போம்-அப்பா!
இன்று சென்ற இடம் தெரியாமல் தவிக்கின்றோம்
-அப்பா!
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும் நினைவுகள்
நீங்கிடுமோ-அப்பா!
மண்ணில் நாம் இருக்கும்வரை உம்மை மறப்
போமோ-அப்பா! தலைவா!

தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி உதவியவர்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


மேலும், அந்தியேட்டிக்கிரியை இன்று 31-12-1993 வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

'சிவபதி'
வினாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்,
(7080)

என்றும் தங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி சிவயோகம்
மகள்மார் மல்லிகாதேவி
பத்மராணி,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

## 90ஆம் நினைவு நாள்

31-12 1993



### நவரட்ணம் ஜெயராஜ் (ராசன்)

இறைவன் அடியில்: 01-10-1993

மாலிச்சந்தி - நண்பர்கள். (7026)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# புலிகளின் தலையீடு பற்றி கருணாநிதி டில்லிக்கு புகார்

(சென்னை)

தஞ்சாவூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தி. மு க பொதுக்குழுக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் தமதுகட்சி உள்விவகாரத்தில் தலையிடுவதாக குற்றம்கூறி இயற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதி இந்திய மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்படுமென தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி பத்திரிகையாளரிடம் கூறினார். இவ்விவகாரத்தில் தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் மெத்தனமாக இருக்கக்கூடாதுஎன அ ை( ட லும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கும்படி தமிழ்நாடு அரசிற்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என்று நேற்றுமுன் தினம் மாநிலங்கள் அவையில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரால் கூறப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் வி. நாராயணசாமி சபையில் இப்பிரச்சினையை எழுப்பினார். தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் தாராளமாக செயற்பட மாநிலஅரசு இடம் கொடுத்துள்ளதென அவர் குற்றம் சாட்டினார்.

ராஜீவ்காந்திகொலைவழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது விசாரணை நடாத்துவதற்கு அவரை இந்தியாவிற்கு கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## குருநகரில் மேலும் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சின்னக்கடை பகுதிமீது சிறிலங்கா போர்விமானம் கடந்த 5ஆம்திகதி நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலின் போது படுகாயமடைந்து சிகிச்சைபெற்றுவந்த ஆசீர்வாதம் ராணி (வயது43)என்பவர் நேற்றுயாழ் போதனா மருத்துவமனையில் மரணமானார்.

### குண்டுவீச்சில்

(வயது47), முனுசாமி(வயது 53), கதிர் (வயது70), பரமநாதன் (வயது38), கந்தன் (வயது34),

பொன்னையா மகிந்தன் (வயது30) உசன் மிருசுவில், சுந்தரம்பிள்ளை பரமநாதன் (வயது38), வெள்ளாம்போக்கடி மீசாலை, சிவசம்பு தனபாலசிங்கம்(வயது48) சங்கத்தானை சாவகச்சேரி, நமசிவாயம்ஐயாத்துரை(வயது70) கச்சாய் வீதி சாவகச்சேரி, வி. ராஜன் (வயது35) உசன் மிருசுவில், கு. கணேஸ் (வயது54) கல்வயல் சாவகச்சேரி, கோவைச்செல்வன் (வயது38) இணுவில் கிழக்கு, பரமதேவன் சயந்தன் (வயது 8) தபால் நிலைய வீதி சாவகச்சேரி, செல்லையா மகேந்திரன் (வயது37) கச்சாய் வீதி சாவகச்சேரி, வேலுப்பிள்ளை மகேந்திரன் (வயது59) சாவகச்சேரி, ஜெயக்குமார் சாவகச்சேரி (சாவகச்சேரி வர்த்தக சங்க உபதலைவர்), செல்லையா ரவிதரன் (வயது18) சரசாலை சாவகச்சேரி, பொன்னம்பலம் பாலசிங்கம் (வயது38) ஆறுமுகம்கூல்பார் சாவகச்சேரி, செல்லையா பாலச்சந்திரன் (வயது38) நுணாவில் மத்திசாவகச்சேரி, செல்லத்துரை சிவராசா (வயது 45), பற்மநாதன் நந்தகுமார் (வயது17) அரசடி நல்லூர், ஆ. இரத்தினம் அரசடி நல்லூர், சங்கத்தானையைச்சேர்ந்த ஒரே குடும்பத்தைச்சேர்ந்த தந்தை பிள்ளைகளான குமாரசாமி அற்புதராசா (வயது 40), அற்புதராசா இந்துமதி (வயது8), அற்புதராசா திலீபன் (வயது 4), அற்புதராசா பிரதீபன் (வயது 10), றோஸ்மேரி குரைட்ணம், வினாசித்தம்பி சுப்பிரமணியம் (வயது 63) மட்டுவில் வடக்கு, ஞானமுத்து குமாரசாமி (வயது 42), வினாசித்தம்பி சசிக்குமார் (வயது 16) சாவகச்சேரி, நடராசா முருகதாசன் (வயது 25) சாவகச்சேரி வடக்கு, சரவணமுத்து கோடீஸ்வரன் (வயது28)பாலாவி தெற்கு கொடிகாமம், செல்லன் வீரசிங்கம் (வயது 39) யாழ்வீதி, யாழ்ப்பாணம்.

### பிரச்சினை

பட்டதல்ல. இந்த யுத்தத்தின்பின்னணியில் பல காரண காரியங்கள் உள்ளன. இவையே யுத்தம் நீடிப்பதற்கும் இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதற்கும் ஏதுவாக அமைந்துள்ள காரணங்களாகும்.

அமைச்சர்கள் மட்டுமல்ல மக்களும் இப்பிரச்சினைகள் தொடர்பாக தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடவேண்டும். எனவேதான் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என்றும் பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரெலோ தேசவிரோதிகளால் சிறுவர்கள் கடத்தல்

### ஆயுதப் பயிற்சிபெற வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலும், தென் தமிழ் ஈழப் பகுதியிலும் ரெலோ தேச விரோதிகளால் பிடிக்கப்பட்ட தமிழ்ச் சிறுவர்களுக்குப் பலவந்தமாக ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

வவுனியா ஜோசப் இராணுவமுகாமிற்கு அடுத்தகாட்டுப் பகுதியில் வைத்தே இப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பத்து வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் இடைப்பட்ட வயதினையுடைய சிறுவர்களே இப்பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வறுமையின் காரணமாகத் தம்மைத் தம் பெற்றோரால் பணம் கொடுத்து மீட்டெடுக்க முடியாத நிலையில் தாம் இவ்வாறு துன்பங்களுக்கு ஆளாகி வருவதாக ஆயுதப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சிறுவர்கள் அழுதவாறு பொதுமக்களிடம் கூறினர்.

கொலை, கொள்ளை மற்றும் தேசவிரோத வேலைகளில் ஈடுபடுத்தவே இவர்களுக்கு ரெலோ தேசவிரோதிகள் பலவந்தமாக ஆயுதப் பயிற்சி வழங்குவதாகத் தெரியவருகின்றது.

### எங்கும்

பணியில் தமிழீழக் காவல் துறையினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். வீதிகளில் வீழ்ந்து வெடித்த றொக்கட்டுகளினால் சாவகச்சேரி பிரதான வீதி, கச்சாய் வீதிகளில் பாரிய குழிகள் காணப்படுகின்றன. (86) (ச)

## மரண அறிவித்தல்கள்

### கோவிந்தர் முத்தையா பேரம்பலம்

காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சித்தன்கேணியைவசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கோவிந்தர் முத்தையா பேரம்பலம் அகாலமரணமானார். இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும் கேமராணி, கேமலதா, கேமபாலன், கேமச்சந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பகல் 12.00 மணியளவில் அவரதுஇல்லத்தில்நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் தகனம்செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சித்தன்கேணி சந்தி,
சித்தன்கேணி. (7093)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி சிவகாமிப்பிள்ளை தியாகராசா

வசாவிளான் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பராயை தற்போதைய வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி சிவகாமிப்பிள்ளை 30-12-93-ல் சிவபதமடைந்தார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு
(7094)

தகவல்:
தி. பவளராணி (மகள்)
(பழம்)

### இராமலிங்கம் ஆறுமுகம் பத்தர்

தட்டாதெரு, சங்கத்தானையைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் அன்னம்மாவினது அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மயில்வாகனப் பத்தரின் மருமகனும், கிருஷ்ணசாமி, சுகுமாரன், கோகிலராணி, இராசபாலன், முத்துமலர், பவளமலர், தங்கமலர், சசிகலா ஆகியோரின் அன்புத்தந்தையும்ஆகிய இராமலிங்கம்ஆறுமுகம்பத்தர் காலமானார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று பி. ப. 2 மணிக்கு நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தட்டாதெரு,
சாவகச்சேரி. (7095)

தகவல்:
ஆ. சுகுமாரன (குணம்)